REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK

2024 பெப்ரவரி 12 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 92 இல. 37 | Monday 12, February, 2024 | 16பக்கங்கள் | 50/-

## ஜனாதிபதி ரணில் நாடு திரும்பினார்

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்ற 07ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பினார். ஜனாதிபதி நேற்று முன்தினம் (10) இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL309 மூலம் ஜனாதிபதி மற்றும் தூதுக்குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். ஜனாதிபதி ரணில் 06

## கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் நினைவு பேருரை 17ம் திகதி



அமரர் டாக்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ் நினைவஞ்சலிக் கூட்டம் மற்றும் நினைவுச் சொற்பொழிவு என்பன எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.45க்கு கொழும்பு 10 ஒராபி பாஷா மாவத்தை, இல 406 இல் அமைந்துள்ள சாஹிரா கல்லூரியின் கஃபூர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'இலங்கை முஸ்லிம், தமிழ்த் தலைவர், செனட்டர் அஸீஸின் உரைகளில் 06

16 வயதுக்கு உட்பட்ட சிறார்களுக்கும்

## கல்லீரல், செவிப்புலன் மாற்று சிகிச்சை வழங்க ஜனாதிபதி நிதியத்தால் உதவி

### ராகம போதனா, ஸ்ரீஜயவர்தனபுர ஆஸ்பத்திரிகள் தெரிவு




சிறார்களுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, செவிப்புலன் மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதியுதவி வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாட்டின் எதிர்கால நலனுக்காகவும் வறிய பெற்றோரின் நலனுக்காகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

வட கொழும்பு பொது வைத்தியசாலையில் (ராகம போதனா

ராகம போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சிறார்களுக்கான கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பெரியாஸ்பத்திரியில் சிறார்களுக்கு மேற்கொள்ளப்படும் செவிப்புலன் மாற்று சத்திரசிகிச்சை என்பவற்றுக்காக ஜனாதிபதி நிதியில் இருந்து நிதியுதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

வைத்தியசாலை) மேற்கொள்ளப்படும் சிறார்களின் (16 வயதுக்குட்பட்ட) கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்னும் பின்னும் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைக்கான அதிக செலவைக் கருத்தில் கொண்டு, சாதாரண மற்றும் ஏனைய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக 2024 ஜனவரி முதல் ஜனாதிபதி நிதியிலிருந்து 10 06




சுகவீனமுற்றுள்ள முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவின் நலம் விசாரிப்பதற்காக நேற்றுக் (11) காலை கட்டுகம்பளையிலுள்ள அவரது இல்லத்துக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சரின் நலன் பற்றி விசாரித்ததோடு சிறிது நேரம் அவருடன் அமர்ந்து உரையாடினார். 06

# சுங்கத்தில் அனுமதி பெறாத 400 வாகனங்கள் மோசடியாக பதிவு

### 07 அதிகாரிகளுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்குத் தாக்கல்




டிசம்பர் 10ஆம் திகதி வாரமஞ்சரியில் வெளியான செய்தி தொடர்பானது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தைச் சேர்ந்த 05 உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 07 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

சுங்கத்தினால் அனுமதி பெறப்படாத பெருமளவிலான வாகனங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்ததன் மூலம் அரசாங்கத்திற்கு பாரிய நட்டம் ஏற்படுத்தியுள்ளமை தொடர்பிலேயே மேற்படி ஏழு பேருக்கு எதிராக அந்த ஆணைக்குழு வழக்கு தாக்கல் செய்துள்ளது. அந்த வகையில் அனுமதி வழங்கப்படாத சுமார் 400 வாகனங்களை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் பதிவு செய்துள்ளமை தொடர்பில் ஆணைக் குழுவுக்கு தகவல் கிடைத்துள்ளதையடுத்தே வழக்கு தாக்கல் 06




சொகுசு வாகனங்களை தமது அதிகாரத்தை பயன்படுத்தி பதிவு செய்த 05 மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் மீதும் வழக்கு

பிரதமர் மோடி, ஜனாதிபதி ரணில் தலைமையில்

## இலங்கையில் இன்று முதல் UPI கட்டண முறை அறிமுகம்



இந்தியாவின் (UPI) Unified Payments Interface என்ற ஒருங்கிணைந்த கட்டணம் செலுத்தும் முறைமை இன்று முதல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணையவழி முறையின் ஊடாக கொழும்பில் இதனை அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்திரேலியாவின் பேர்த் 06

## சமூக ஊடகங்களில் அவதூறு சந்தேக நபர் CIDயால் கைது

### 4,00,000 ரூபா பணமும் கைப்பற்றல்; அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமூக ஊடகங்கள் மூலம் அரசாங்கத்துக்கும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் தொடர்பிலும் அவதூறு பரப்பிய நபர் ஒருவரை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். 06

10,000 இந்திய வீட்டுத் திட்டம்:

## முதற்கட்டமாக 1,300 வீடுகள் 19ஆம் திகதி அடிக்கல் நடுகை

### அமைச்சர் ஜீவன் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெருந்தோட்டத்துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வு அன்றி நிரந்தர தீர்வையே எதிர்பார்க்கின்றோம் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு 06

2024 ஜனவரி மாதத்தில் மாத்திரம்

## வெளிநாட்டிலுள்ள இலங்கையரால் 487.6 மில். டொலர் நாட்டுக்கு வருவாய்

### 2024 இல் இதுவரை 2,68,375 சுற்றுலா பயணிகளும் வருகை; அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

2024 ஜனவரி மாதத்தில் மாத்திரம் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர் 487.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டுக்கு 06




பேருவளை, ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் நாற்பெரும் விழா நேற்று (11) கலாபீட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது நினைவு முத்திரையும் முதல் நாள் கடித உறையும் விழாவின் பிரதம அதிதியான பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலிடம் கையளிக்கப்பட்டு வெளியிடப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: அஜ்வாத் பாஸி, அஷ்ரப் ஏ சமத்)

'இதுவல்ல யாழ். மக்களின் அடையாளம்'

## யாழ். முற்றவெளி சம்பவம் அங்கஜன் MP அறிக்கை

### ஏற்பாட்டாளர்கள் விளக்கமளிக்க வேண்டும்



வடக்கில் பெரும் முதலீட்டை ஏற்படுத்தும் நோக்கில் தொழிலதிபர் இந்திரன் பத்மநாதனால் யாழில் மாபெரும் இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சியின் ஏற்பாடுகள் மூன்றாம் தரப்புக்கு வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு மூன்றாம் தரப்புக்கு வழங்கப்பட்டிருந்த 06

## சம்பள விவகாரத்தில் கம்பனிகள் தான்தோன்றித்தன செயற்பாடு

### வடிவேல் சுரேஷ் குற்றச்சாட்டு



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேரடியாகப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ள போதிலும், கம்பனிகள் தான்தோன்றித் தனமாகவே 06



03 ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின்

## 42 ஆவது ஆண்டு விழா 14 ஆம் திகதி ஏற்பாடு

## தமிழக மீனவர் மீது கடற்படை தாக்குதல்களை நடத்தவில்லை

### தமிழக குற்றச்சாட்டை கடற்படை மறுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன் பிடிக்கும் இந்திய கடற்றொழிலாளர்கள் மீது இலங்கைக் கடற்படை ஒருபோதும் தாக்குதல் நடத்தவில்லை என இலங்கை கடற்படையினர் தெரிவிக்கின்றனர். கடற்படையின் பேச்சாளர் கயான் விக்ரமசூரிய 06

## பேலியகொடையில் மீன் விலை வீழ்ச்சி



சந்தையில் மீன்களின் விலை குறைவடைந்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். அண்மைய நாட்களில் ஆயிரம் ரூபாவுக்கும் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ மீனின் விலை 300 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை குறைவடைந்துள்ளது. பேலியகொடை மீன் சந்தையில் ஒரு கிலோ பாரை மீனின் விலை 400 ரூபாவினாலும் லின்னா மீனின் விலை 300 ரூபாவினாலும் குறைவடைந்துள்ளதோடு சூரை மீனின் விலை 300 முதல் 350 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## 35 வருடங்கள் தேடப்பட்டு வந்த பெண் பமுனுகம பகுதியில் கைது

### கணவன் தொடர்ந்தும் தலைமறைவு



கொலை வழக்கொன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டு 35 வருடங்கள் தலைமறைவாகியிருந்த பெண்ணொருவர் படுகொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 1989 ஆம் ஆண்டு அத்துருகிரிய வெல்லவ பிரதேசத்தில் 06

## கொழும்பு, யாழ். உட்பட பல்வேறு பகுதிகளில் காற்றின் தரம் வீழ்ச்சி

### பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி உள்ளிட்ட நாட்டின் பல மாவட்டங்களில் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ள தாகவும் அது உடலுக்கு தீங்கு விளைவிக்கும் அளவுக்கு தரம் குறைந்துள்ளதாகவும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் இந்த நிலைமை மிக அதிகமாக காணப்படுவதாகவும் 06

# ஜனாதிபதியின் அவுஸ்திரேலிய விஜயம்



















# ஜனாதிபதி முன்னெடுக்கும் திட்டங்களை எச்சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது

## அநுராதபுரத்தில் ஐ.தே.க பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார

**அநுராதபுரம் மேற்கு, அநுராதபுரம் தினகரன் நிருபர்கள்**

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ளது. இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடவுள்ளார். சகலரும் அதற்காக தயாராகுமாறு வேண்டுகோள் விடுப்பதோடு ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை எவராலும் தடுக்க முடியாது. அவர் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனரென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்யும் அநுராதபுரம் மாவட்ட மாநாடு அண்மையில் அநுராதபுரம் இளைஞர் சேவை கூட்ட மண்டபத்தில் கட்சியின் பெருந்தொகையான உறுப்பினர்களின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க கண்டிப்பாக போட்டியிடுவார். சகலரும் அதற்காக தயராக வேண்டும் என்ற வேண்டுகோளையும் அவர் விடுத்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் அபிவிருத்தி திட்டங்களை எவராலும் தடுக்க முடியாது அவர் மீது மக்கள் அசையாத நம்பிக்கை வைத்துள்ளனர்.



2020 தேர்தலின் போது கட்சி வீழ்ச்சி அடைந்து இருந்த போது மீண்டும் எழுந்து நிற்க முடியாது என சகலரும் எண்ணினர். இருந்தபோதும் நாடு வீழ்ச்சி அடைந்த போது அச்சமின்றி முன்வந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இரண்டு வருடங்கள் முடிவதற்கு முன்னர் நாட்டை சரியான வழியில் இணைத்து பொருளாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்கி ஒக்டோபர் தேர்தலில் வெற்றிபெறச் செய்வோம் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தின் போது அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ருவன் விஜேவர்தன, பிரதி தலைவர் அகில விராஜ் காரியவசம், பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார , முன்னாள் அமைச்சர் பீ. ஹரிசன், ஜனாதிபதியின் ஆலோசகர் பேராசிரியர் ஆசு மாரசிங்க மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரிய உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

## காணித்தகராறு காரணமென தெரிவிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் மஹாகும்புக்கடவல செம்புக்குளியபகுதியில் நேற்று முன்தினம் (10) மாலை இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மஹாகும்புக்கடவல, செம்புக்குளிய பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கணித் தகராறு காரணமாகவே இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மிருகங்களை வேட்டையாடுவதற்காக பயன்படுத்தப்படும் உள்நாட்டு துப்பாக்கி ஒன்றினை பயன்படுத்தி துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதாக கூறப்படும் அதே பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபர் ஒருவர் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார் என மஹாகும்புக்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, ஆனமடுவ, தட்டேவ பிரதேசத்தில் (08) மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் புத்தளம் தள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஷ.ஃபான் மாத தலைப்பிறை தென்படவில்லை

## பெரிய பள்ளிவாசல் அறிவிப்பு

**கொழும்பு தினகரன் நிருபர்**

ஹிஜ்ரி 1445 புனித ஷஃபான் மாத பிறை நேற்று முன்தினம் சனிக்கிழமை (10) தென்படவில்லை என பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. சஹ்பான் மாதத்தின் தலைப் பிறையை தீர்மானிப்பதற்கான மாநாடு 10ஆம் திகதி சனிக்கிழமை மாலை கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது நாட்டின் எப்பாகத்திலும் ஷஃபான் மாதத்திற்கான தலைப் பிறை தென்படாத காரணத்தினால் புனித ரஜப் மாதத்தை 30 ஆக பூர்த்தி செய்து நேற்று 11ஆம் திகதி ஞாயிற்று கிழமை மாலை மஃரிபுடன் ஷஃபான் மாதத்தை ஆரம்பிப்பதென கொழும்பு பெரிய பள்ளிவாசல் மற்றும் பிறைக்குழு என்பன உத்தியோகபூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளது. தலைப் பிறையை தீர்மானிப்பதற்கான மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரசீன் உள்ளிட்ட பள்ளிவாசலின் நிர்வாகிகள், கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிறைக் குழு மற்றும் முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பிரதிநிதிகள், இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட உத்தியோகத்தர் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழுவின் உப தலைவர் மௌலவி அஹமட் ஸாஹ் தலைமையில் இடம் பெற்றிருந்தது.

இதன் பிரகாரம் புனித பராஅத் இரவு (ஷஃபான் 15ஆம் இரவு) 2024.02.25ஆம் திகதி ஞாயிறு மாலை (திங்கள் இரவு) அனுஷ்டிக்கப்படும் என்றும் ஹிஜ்ரி 1445 ரமழான் மாதத்திற்கான தலைப் பிறையை தீர்மானிக்கும் மாநாடு எதிர்வரும் ஷஃபான் பிறை 29வது நாளாகிய 2024.03.11ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கூடும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# வீதி விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு; புத்தளத்தில் சம்பவம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கொழும்பு புத்தளம் பிரதான வீதியின் மதுரங்குளி 10 ஆம் கட்டை பகுதியில் (09) காலை இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மதுரங்குளி, புபுதுகம பகுதியைச் சேர்ந்த 47 வயது மதிக்கதக்க குடும்பஸ்தர் ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பகுதியில் இருந்து புத்தளம் பகுதியை நோக்கிப் பயணித்த சொகுசு கார், வீதியோரத்தில் நின்ற நபர் மீது மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர். சிலாபத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் தனது மகனை பஸ்ஸில் ஏற்றுவதற்காக குறித்த நபர் தனது வீட்டிக்கு முன்னால் வீதியோரத்தில் நிற்றுகொண்டிருந்த போதே இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளார்.

எனினும், தந்தைக்கு அருகில் நின்றுகொண்டிருந்த மகன் அதிஷ்டவசமாக எவ்விதமான காயங்களும் இன்றி உயிர்தப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சொகுசு கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், வீதியோரத்தில் நின்ற குறித்த நபர் மீது மோதியுள்ளது என விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

# ரூ. 3 இலட்சம் பெறுமதியான மோ. சைக்கிள் திருட்டு

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நகரில் அமைந்துள்ள தனியார் வகுப்பொன்றுக்குச் சென்றதாக கூறப்படும் நாச்சியாதீவு பிரதேச மாணவர் ஒருவரின் (CP Ty 0689) இலக்கம் கொண்ட, டிஸ்கவர் மோட்டார் சைக்கிளொன்று அநுராதபுரம் Esoft நிறுவனத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தநிலையில் (08) களவாடப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ தினம் உரிய இடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வகுப்பு முடிந்ததும் உரிய இடத்துக்கு வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளை காணவில்லை எனவும் இது திட்டமிட்டு களவாடப்பட்டுள்ளதாகவும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 12 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.48
மஃரிப் - 06.21
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் தை 29
ராகுகாலம் : காலை : 8.04 - 9.34வரை
சுபநேரம் : பகல் : 12.34 - 2.04வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# ஆசிய இளையோர் செஸ் சாம்பியன் சுசல் சில்வாவுக்கு பிரதமர் பாராட்டு

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற 2024ஆம் ஆண்டு ஆசிய இளையோர் செஸ் சாம்பியன்ஷிப் (18 வயதுக்குட்பட்டோர்) போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற எல்.எம்.சுசல் த சில்வாவை, பிரதமர் தினேஷ் குணவர்தன பாராட்டினார். கடந்த 09 ஆம் திகதி பிரதமரின் பாராளுமன்ற அலுவலகத்தில் வைத்தே அவரைச் சந்தித்தார்.

கொழும்பு நாலந்தா கல்லூரியில் கல்வி பயின்ற இளம் கிரிக்கெட் வீரரான இவர், நாட்டுக்கு கொண்டு வந்த புகழைப் பாராட்டி, அவரது எதிர்கால வாழ்க்கைக்கு ஆசி வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் விளையாட்டு வீரர் எல்.எம்.சுசல் த சில்வாவின் தாயார் Youth Circle of Sri Lanka இன் தலைவர் மஹிம் திசநாயக்க, சனச வர்த்தக விரிவாக்க பணிப்பாளர் (சனச காப்புறுதி) துசித் வீரவர்தன, சனச பயிற்சி பிரதானி (சனச காப்புறுதி) சாலி யசில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

15 வயதுடைய எல்.எம்.சுசல் த சில்வா, (2021) இலங்கையின் இளைய தேசிய செஸ் சாம்பியனானார், 2022 இல் தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் 2023 இல் மூன்றாவது முறையாகவும் தேசிய சாம்பியன்ஷிப்பை வென்றார். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பல தேசிய செஸ் சாம்பியன்ஷிப்களையும் வென்றுள்ளார்.



## போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர்
# கைது செய்யப்பட்டால் அவரது சொத்துகள் அரசுடமையாக்கப்படும்
## பதில் பொலிஸ் மாஅதிபர்

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர் கைது செய்யப்பட்டால், உழைத்தவரது அனைத்து சொத்துக்களையும் அரசுடமையாக்க விரைவில் நடைமுறைப்படுத்துவோமென பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி இரண்டு மாதங்கள் சிறையில் வைத்திருந்து விடுவிக்கும் முறைமையை எதிர்காலத்தில் இல்லாமல் செய்து அதற்கு பதிலாகவே சொத்துக்களை அரசுடமையாக்கும் திட்டம் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படுமென்றும் தெரிவித்த அவர், போதைப்பொருள் அச்சுறுத்தலற்ற நாட்டை இன்னும் ஒன்றரை மாதத்துக்குள் உருவாக்குவோமென்றும் தெரிவித்தார்.

'யுக்திய' நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தக் காலப்பகுதிக்குள் போதைப்பொருளினால் சம்பாதித்த 726 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டத்தின் கீழ் பொலிஸாரின் பொறுப்பின் கீழ் கொண்டு வந்து, அவற்றை அரசுடமையாக்கும் நடவடிக்கையையும் முன்னெடுத்துள்ளோம். இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்போது எனக்கும், அமைச்சருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். நாட்டு மக்கள் பொலிஸாரை உற்சாகப்படுத்துங்கள். பிழைகள் செய்கின்ற மற்றும் குறைபாடுகளுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் காணப்படலாம். இந்நிலையில் இது தொடர்பில் விலகியிருந்தால் அல்லது கற்களை வீசினால், பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றால் குற்றவாளிகள் அதனை பயன்படுத்திக்கொள்வார்கள் என்றார்.

# இலங்கையை ஆக்கிரமித்துள்ள போதைப்பொருள் அச்சுறுத்தல்
## எதிர்கால சந்ததியை காப்பற்றவே 'யுக்திய'

நாட்டின் எதிர்கால சந்ததியினரைக் காப்பாற்றும் நடவடிக்கையே 'யுக்திய' நடவடிக்கை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் குழுக்களுக்கு 'யுக்திய' நடவடிக்கை தொடர்பில் அறிவிக்கும் விஷேட செயலமர்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

"நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த நேரத்தில், இந்த அமைச்சை நாங்கள் பொறுப்பேற்றதும் நிலைமையை அமைதிப்படுத்தும் பொறுப்பு எங்களுக்குக் கிடைத்தது. அப்போது மக்கள் தங்களை காக்க முடியாத நிலை ஏற்பட்டது.

வெளிநாட்டினர் நாட்டுக்கு வரவில்லை. இந்த நிலையிலிருந்த நாட்டை அமைதிப்படுத்த நாம் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் இறுதியில் அந்த சவாலை எங்களால் சமாளிக்க முடிந்தது. இல்லையென்றால் எரிவாயு வரிசையிலும், எரிபொருள் வரிசையிலும் மக்கள் அவதிப்பட வேண்டியிருக்கும்.

எவ்வாறாயினும், நிலைமையைக் கட்டுப்படுத்திய பின்னர், நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் ஆக்கிரமித்துள்ள போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதே நாம் எதிர்கொண்ட மிகப் பெரிய சவாலாகும்.

இந்த நிலைமை தொடர்பில் தற்போது விசேட குழுவொன்றின் ஊடாக பல மாதங்களாக ஆய்வுகளை மேற்கொண்டு அதற்கான வேலைத்திட்டத்தை தயாரித்தோம்.

அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தற்போதைய பதில் பொலிஸ் மாஅதிபரை அந்தப் பதவிக்கு நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன். அதன்படி, சுதந்திரமாக நிதி நடவடிக்கையை தொடங்கி நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினேன். பல்வேறு நபர்களின் செல்வாக்கின் கீழ் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளை விடுவிக்கும் மரபை மாற்றியுள்ளோம். துறைக்கு பொறுப்பான அமைச்சராக, நான் நேரடியாக பணியாற்றுகிறேன். அதன்படி நாடளாவிய ரீதியில் இந்த செயற்பாடுகள் வெற்றிகரமாக நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கையை நிறுத்துமாறு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் எனக்கும், பொலிஸ் மாஅதிபர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கும் உள்ளூரிலும் சர்வதேச அளவிலும் அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

## ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின்
# 42 ஆவது ஆண்டு விழா 14 ஆம் திகதி ஏற்பாடு

**தெஹிவளை, கல்கிஸ்ஸ விசேட நிருபர்**



இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் 42 ஆவது வருட நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி நள்ளிரவு பௌத்த மத பிரித் நிகழ்வுடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி 42ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்படும்.

நிகழ்வின்போது லேக் ஹவுஸ் நிறுவனத்துடன் விளம்பர ஒப்பந்தமொன்றும் லேக்ஹவுஸ் அதிகாரிகளுடன் கைச்சாத்திடப்படும். அத்துடன் இலங்கை ரூபவாஹினி, நேத்ரா, ஐ சனல் ஆகிய மூன்று அலைவரிசையிலும் இணையதளம் ஊடாக வானொலி நேரடி ஒலிபரப்பு ஒன்றும்

06

# 70 இலட்சம் முட்டைகள் இறக்குமதி
## ஓரிரு தினங்களில் ச.தொ.சவுக்கு

அரச வணிக பலநோக்கு கூட்டத்தாபனத்தின் தலைவர் தெரிவிப்பு



ஓரிரு தினங்களுக்குள் அனைத்து ச.தொ.ச நிறுவனங்களுக்கும் முட்டை விநியோகிக்கப்படும் என அரச வணிக பல நோக்கு

06

# பலத்த காற்றினால் இரண்டாக உடைந்த படகு பாகங்கள் மீட்பு



இயந்திரம் உட்பட பொருட்கள் கடலில் மூழ்கின இயந்திரமின்றி இரண்டாக உடைந்த படகு நேற்று (11) சாய்ந்தமருது கடற்கரைப்பகுதியில் மீட்கப்பட்டு கரைக்கு இழுத்து வரப்பட்டுள்ளது.

கடற்கரையில் நங்கூரமிடப்பட்டு படகு நிறுத்தப்பட்ட போதிலும் அப்பகுதியில் வீசிய பலத்த காற்றினால் படகு இரண்டாக உடைந்து இயந்திரமும் கடலில் விழுந்து காணாமல் போயுள்ளது.

இவ்வாறு உடைந்த படகின் பாகங்கள் கனரக வாகனத்தின் உதவியுடன் கரைக்கு இழுத்து வரப்பட்டன.

கடல் பகுதியில் தொழில் செய்துவரும் மீனவர் ஒருவர் படகு உடைந்து கிடப்பதை கண்டு தகவல் வழங்கியதையடுத்து படகை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

உடைந்த படகு கல்முனை பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், பல இலட்சம் பெறுமதியான இயந்திரம் வலைகள் உட்பட பல உபகரணங்கள் சேதமடைந்துள்ளன.

# பூஸா சிறைச்சாலைக்குள் நிலக்கீழ் கொமியுனிகேஷன்
## கையடக்கத் தொலைபேசிகள், சிம் கார்ட்கள் மீட்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதி பாதுகாப்புடன் கூடிய பூஸா சிறைச்சாலையில் பூமிக்கடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகை கையடக்கத் தொலைபேசிகளும் உதிரிப்பாகங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட செயலணி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறைச்சாலையில் ஏ மற்றும் பி பிரிவு பகுதிகளில் மண்ணைத் தோண்டி பூமிக்கடியில் மிகக் கச்சிதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மேற்படி கையடக்கத் தொலைபேசி மற்றும் உதிரிப்பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு கண்டெடுக்கப்பட்டவைகளில் ஒரு ஸ்மார்ட் போன் கையடக்கத் தொலைபேசி, சிறு அளவிலான இரண்டு கையடக்கத் தொலைபேசி, நான்கு சிம் கார்ட், ஒரு மெமரி சிப், இரண்டு கையடக்கத் தொலைபேசி சார்ஜர்கள், இரண்டு டேட்டா கேபிள்கள், ஒரு ஹான்ப்ரி உள்ளிட்டவைகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

வரிசெலுத்துநர்களே உங்கள் கவனத்திற்கு!

2023/2024 ஆம் வரி மதிப்பீட்டாண்டு
கீழ்வரும் வரி கொடுப்பனவுகளை 2024, பெப்ரவரி 15 அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தவும்

| வரி வகை | | வரி வகை குறியீடு | காலப் பகுதிக் குறியீடு | கொடுப்பனவு வகை |
|---|---|---|---|---|
| 3 ஆவது காலாண்டு தவணை | கூட்டிணைந்த வருமான வரி (CIT) | 02 | 23243 | S |
| | தனியாள் வருமான வரி (IIT) | 05 | 23243 | |
| | பங்குடமை வருமான வரி (PIT) | 09 | 23243 | |
| சனவரி மாதத்தில் நிறுத்தி வைக்கப்பட்டவை | வட்டி மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரி (WHT) | 43 | 24010 | |
| | கட்டணங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீதான முற்பண வருமான வரி (AIT) / நிறுத்திவைத்தல் வரி (WHT) | 44 | 24010 | |
| | முற்பண தனியாள் வருமான வரி (APIT) | 03 | 24010 | |

கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டாம்

கவனத்தில் கொள்ளவும்:

- செலுத்த வேண்டிய வரிகளை இணையவழி வரிக் கொடுப்பனவு தளத்தினூடாக (OTPP) செலுத்தவும் மேலதிக விபரங்களுக்கு https://www.ird.gov.lk/en/publications/SitePages/Online_Pay_OTP.aspx?menuid=141601 இனை பார்க்கவும்
- CIT, IIT, PIT & APIT கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம்.
- AIT & WHT க்கான கொடுப்பனவுகள் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்தலாம் உங்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை (TIN) காசோலையின் பின்பக்கத்தில் எழுதவும். மேலும் கொடுப்பனவு நறுக்குகளின் பின்பகுதியில் மேலதிக தகவல்கள் காணப்படுகின்றன.
- அச்சிடப்பட்ட கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்காதவிடத்து, கொடுப்பனவினை வங்கியில் (முக்கியமாக மக்கள் வங்கியில்), செலுத்தும் போது DIN (இலக்கம்) இனை https://eservices.ird.gov.lk/Payment/PayingInSlip/Index இனூடாக பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

வரியை செலுத்தாது விடுதல் அல்லது தாமதமாக செலுத்துதல் மீதான தண்டம் தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என்பதை அறிந்துகொள்ளவும்.

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைத்தளத்தைப் பார்வையிடவும்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944
வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக
வலைத்தளம் : www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 01

### குறள் தரும் சிந்தனை



ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்

மழை என்னும் வருவாய் வளம் குன்றிவிட்டால், உழவுத் தொழில் குன்றி விடும்.

## காற்றுமாசு காரணமாக எமது ஆரோக்கியம் பாதிக்கப்படுமா?

கொழும்பு நகரம் உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் காற்றின் தரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. நாட்டின் வளிமண்டலம் மாசு அடைந்திருப்பது கடந்த சில தினங்களாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

சில தினங்களாக காலை வேளையில் எமது வளிமண்டலத்தில் புகார் தென்படுகின்றது. அதனை நாம் சாதாரண பனிப்புகாராகவே நினைத்துக் கொண்டிருக்கின்றோம். நாட்டில் இப்போது பனிப்பொழிவு உள்ளதும் உண்மைதான். ஆனால் எமது வளிமண்டலம் புகைமூட்டமாகக் காணப்படுவதற்கு பனிப்புகார் மாத்திரம் காரணமல்ல.

வளிமண்டலத்தில் தூசுத்துணிக்கைகள் அதிகரித்து விட்டதனாலேயே இவ்வாறு தென்படுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இலங்கையில் வளிமண்டலம் இவ்வாறு மாசு அடைவதற்கு பல காரணங்கள் உள்ளன. எமது நாட்டில் வாகனங்களிலிருந்து வெளியேறுகின்ற புகையும் இதற்கான ஒரு காரணமாகக் கருதப்படுகின்றது. ஆனால் இலங்கையின் வளிமண்டலம் மாசு அடைவதற்கு வடஇந்தியாவின் கோதுமை வயல்களும் காரணமாக அமைவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வடஇந்தியாவில் உள்ள கோதுமை வயல்களில் அறுவடை முடிவடைந்த பின்னர் வைக்கோலுக்குத் தீவைக்கின்றார்கள். அங்குள்ள பெரும் பரப்பிலான வயல்களில் இருந்து வெளியேறுகின்ற புகைமூட்டமானது தமிழ்நாட்டின் வளிமண்டலத்தையும் தாண்டி இலங்கையையும் வந்தடைகின்றது. அதுமாத்திரமன்றி, வடஇந்தியாவின் கோதுமை வயல்களிலிருந்து வெளியேறுகின்ற வைக்கோல் தூசுத்துணிக்கைகளும் காற்றுமண்டலத்தினால் இலங்கையை வந்தடைகின்றன.

இவ்வாறான காரணிகளால் எமது நாட்டின் காற்று அதன் தரத்தை இழக்க நேரிடுகின்றது. வளிமண்டலத்தில் புகைமூட்டமும் தூசுக்களும் அதிகமாகும் போது அதனை நாம் காற்றுமாசு எனக் குறிப்பிடுகின்றோம். ஆனால் எமது வளிமண்டலமானது எக்காலத்திலும் தூசுக்களாலும் மாசுக்களாலும் நிறைந்துதான் இருக்கின்றது. எனினும் குறிப்பிட்ட அளவைப் பார்க்கிலும் மாசுக்கள் அதிகரிக்கும் போதுதான் சிக்கலே ஏற்படுகின்றது. காற்று அதன் தரத்தை இழப்பது ஒருபுறமிருக்க, வளிமாசு காரணமாக மக்களுக்கு பலவித உடல்உபாதைகளும் தோன்றுகின்றன.

எனவே காற்றின் தரம் வீழ்ச்சியடைவது குறித்து மக்கள் அலட்சியமாக இருந்துவிட முடியாது. குறைந்தபட்சம் முகக்கவசம் அணிந்தவாறு நடமாடுவது ஓரளவு பாதுகாப்புத் தருமென்று மருத்துவர்கள் கூறுகின்றனர். காற்றின் தரம் வீழ்ச்சியடைந்திருக்கும் வேளையிலாவது முகக்கவசத்தை அணிந்து நடமாடுமாறு மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ஐக்கிய அமெரிக்க காற்றின் தரம் நிர்ணயத்துக்கு அமைய நேற்று கொழும்பு நகரில் காற்றின் தரம் 157 சுட்டெண்ணாக பதிவிடப்பட்டுள்ளது. அந்த தரச் சுட்டெண்ணுக்கு அமைய நேற்றுக்காலை இலங்கையின் எதுல்கோட்டே பகுதியில் காற்றின் தரம் 172 சுட்டெண் புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அத்துடன் பதுளை, மொனராகலை, தம்புள்ளை, மஹரகம உள்ளிட்ட பகுதிகளில் நேற்றைய தினம் காற்றின் தரம் 150 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

காற்று தர சுட்டெண் (AQI) என்பது உயிரினங்கள் சுவாசிக்கத் தேவையான அளவு காற்று இருக்கிறதா? அது எந்தளவு மாசுபட்டு இருக்கிறது என்பதைப் பற்றிய அளவீடு ஆகும். இதனைக் கணிப்பதற்கென்று பிரத்தியேகமான சாதனங்கள் இருக்கின்றன.

பூச்சியம் தொடக்கம் 50 வரை சுட்டெண் இருப்பின் அது திருப்திகரமானதாகும். அதுவே 51–100 வரை செல்லுமானால் மக்கள் எளிதில் நோய்வாய்ப்படக் கூடிய ஆபத்து உள்ளது. அதாவது மூச்சுக்கோளாறு போன்ற உபாதைகள் ஏற்படலாம்.

101–200 வரை செல்லுமானால் நுரையீரல் நோய், இருதய நோய் கொண்டவர்களுக்கும், மேலும் சிறார் மற்றும் முதியோர்களுக்கும் மூச்சுவிடுவதில் பாதிப்பை ஏற்படுத்தும். 201–300 வரையான மாசுக்காற்றினை தொடர்ச்சியாக நுகர்வோருக்கு சுவாசக் கோளாறும், ஏற்கனவே இருதய நோய் உடையோருக்கு அதிக பாதிப்புகளும் ஏற்படும்.

301–400 வரையான மாசுக்காற்றினை தொடர்ச்சியாக நுகர்வோருக்கு சுவாசம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படும். மேலும் இருதய, நுரையீரல்நோய் உடையவர்களுக்கு மிகமோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

40–500 வரையான சுட்டெண் காணப்பட்டால் நல்ல உடல் நலத்துடன் இருக்கும் நபர்களுக்கு சுவாச நோய்கள் ஏற்படும் ஆபத்துண்டு. மேலும் நுரையீரல்,இருதய நோய் பாதிப்புகள் உடையோர்களுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்தியாவின் கங்கை சமவெளி பகுதிதான் மிக மோசமான காற்று மாசடைந்த பகுதியாகும். பஞ்சாப் தொடங்கி மேற்கு வங்கம் வரையான இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்த மாசு காரணமாக தங்கள் வாழ்நாளில் சராசரியாக 7.6 ஆண்டுகளை இழக்கும் அபாயம் உள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது காற்றுமாசு என்பது சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் ஒன்றாகியுள்ளதால், மக்கள் முடிந்தளவு அவதானம் பேணுவது அவசியமாகும். முகக்கவசம் தகுந்த பாதுகாப்புத் தருமானால் அதனை அணிந்து நடமாடுவது சிறந்ததாகும்.

editor.tkn@lakehouse.lk

# பாதுகாப்பான, வளமான இந்துசமுத்திரத்தை உருவாக்குவதற்காக ஒன்றிணைவோம்!




## இந்து சமுத்திர ஏழாவது மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதான உரை

உலகின் பலமான நாடுகள் தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் வரை காத்திருக்காமல், தமக்கான பாதையை அமைத்துக் கொள்ளும் இயலுமை இந்து சமுத்திர வலய நாடுகளுக்கு உள்ளதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இந்து சமுத்திர வலய நாடுகளின் நம்பிக்கையையும் விழிப்புணர்வையும் மேம்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான இந்து சமுத்திரத்தை உருவாக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

2050 ஆம் ஆண்டளவில் இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தி 8 மடங்காக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அவுஸ்திரேலியா பேர்த் நகரில் நடைபெற்ற 7 ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் ஆற்றிய பிரதான உரையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தை அண்டிய நாடுகள் மற்றும் சமுத்திரத்தை பெருமளவில் பயன்படுத்தும் பிற நாடுகளைப் பாதிக்கும் பொதுவான எதிர்பார்ப்புகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் 7ஆவது இந்து சமுத்திர மாநாடு அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்றது.

இந்த மாநாட்டை 'நிலையான மற்றும் நிலைபேறான இந்து சமுத்திரத்தை நோக்கி' என்ற தொனிப்பொருளில் இந்திய வெளியுறவு அமைச்சு மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் இணைந்து இந்திய மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பென்னி வோங், இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெயசங்கர், சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் டொக்டர் விவியன் பாலகிருஷ்ணன் மற்றும் வெளியுறவு அமைச்சர்கள் உள்ளிட்ட இந்து சமுத்திர நாடுகளின் பிரதிநிதிகள் , இந்திய மன்றத்தின் ராம் மாதவ் உள்ளிட்ட பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்து சமுத்திரத்தில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு விரிவான பிராந்திய திட்டமொன்று அவசியம் என்றும், அதனை இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கமான IORA தலைவர்களினால் மட்டுமே செய்ய முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.



கடல் மற்றும் விமான போக்குவரத்துச் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்காத வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பிலான ஒழுங்கு விதிகள், காலநிலை நெருக்கடியை கையாள்வது மற்றும் இந்து சமுத்திரத்தின் நிலையான பயன்பாடு தொடர்பான வழிகாட்டல் விதிமுறைகளின் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும், வர்த்தகப் போக்குவரத்துகளுக்காக தற்காலத்தில் பயன்படுத்தப்படும் சூயஸ் கால்வாய் உள்ளிட்டவை எதிர்காலத்தில் போதுமானதாக இருக்காது. எனவே, பிராந்தியத்தின் விநியோக மையம் என்ற வகையில் இலங்கை தென்னிந்தியாவுடன் வர்த்தகத்தை எளிதாக்குவதற்கான புதிய தரைவழித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தின் ஸ்திரத்தன்மைக்காக, 5 வருடங்களுக்குள் சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான பாலஸ்தீன அரசை நிறுவி, இஸ்ரேல் அரசன் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளின் மூலம் காஸா பகுதியில் போர் மோதல்களை விரைவாக முடிவுக்குக் கொண்டுவருவது அவசியம் என்று ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

"7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் கலந்து கொள்ள பேர்த் நகருக்கு வருகை தர கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மேலும் எங்கள் அனைவருக்கும் வழங்கிய விருந்தோம்பலுக்கு அவுஸ்திரேலிய அரசுக்கு நன்றி. இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த இந்திய மன்றத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமுத்திரம் மற்றும் தென் பசுபிக் கடல் ஆகிய இரு கடல் எல்லைகளிலும் அவுஸ்திரேலியக் கண்டம் அமைந்திருப்பது மிகவும் சிறப்புக்குரியது. மேலும், இலங்கை அவுஸ்திரேலிய உறவுகளின் வரலாற்றில் பேர்த் நகரம் முக்கிய பங்கை வகித்துள்ளது.

காலனித்துவத்திலிருந்து ஆசியா விடுவிக்கப்பட்ட நேரத்தில், ஆசியாவின் புதிதாக சுதந்திர நாடுகளான இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, பர்மா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை காலனித்துவத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் எதிர்க்கும் நோக்கத்துடன் 1955 இல் பெண்டுங் மாநாட்டைக் கூட்டின. பெரும் வல்லரசுகளின் போட்டியை எதிர்க்கும் இந்த மாநாட்டின் பிரகடனத்தைத் தொடர்ந்து அணிசேரா இயக்கம் உருவானது.

உக்ரைன் போர் மற்றும் ரஷ்யாவிற்கு எதிரான மேற்குலகத் தடைகள் காரணமாக சீனா மற்றும் மேற்கு இந்து சமுத்திரத்தின் வளம் நிறைந்த பொருளாதாரங்களில் புதிய சந்தைகளைக் கண்டறிய வழிவகுத்தன. உதாரணமாக, வளைகுடா பகுதியில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் ரஷ்ய மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்படுகிறது. லண்டனுக்கு பதிலாக, துபாய் ஆதிக்கவாதிகளின் நிதி மையமாக மாறியுள்ளது.

ரஷ்யாவுடன் ஈரான் நெருங்கிய நட்பை வளர்த்துக் கொண்டுள்ளதுடன், அது ட்ரோன் விமானங்களுக்கான முக்கிய விநியோக ஆதாரமாக உள்ளது. ரஷ்யா, மியான்மார் மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட இந்து சமுத்திர நாடுகளுடன் கடற்படை பயிற்சிகளை நடத்தி வருகிறது. ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான பிளவைக் போக்குவதில் சீனா முக்கிய பங்காற்றியுள்ளது. ஈரானும் அதன் நட்பு நாடுகளும் மேற்கு ஆசியாவில் முக்கியமான செயற்பாட்டுடைய நாடுகளாக மாறிவிட்டன.

ஷெங்ஹாய் ஒத்துழைப்பு அமைப்பில் பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகியவை உறுப்பினர்களாக இருப்பதால், அதன் வெளிப்புற எல்லையாக மேற்கு இந்து சமுத்திரம் உள்ளது.

காஸா போரை ஆதரிப்பதில் அமெரிக்காவின் எச்சரிக்கையான தீர்ப்பு அதன் செல்வாக்கைக் குறைக்கிறது. இந்து சமுத்திரத்தில் இஸ்லாமிய வளைவை தோற்றுவித்த நாடுகளுக்கு இடையிலான பகைமை, அமெரிக்காவிற்கும் நட்பு நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய உறவுகள் ஏற்படுவதை குறுகிய காலத்திற்குத் தடுக்கும்.

ரஷ்ய, சீன மற்றும் ஈரானிய உத்திகள் அமெரிக்க மேலாதிக்கத்தை வெற்றிகரமாக தாக்கிக்கொண்டிருப்பதோடு, அதன் மூலம் அமெரிக்காவை மேலும் பலவீனப்படுத்துகின்றது.

எனவே, இந்து சமுத்திரத்தின் ஸ்திரத்தன்மைக்கு, 05 ஆண்டுகளுக்குள் சுதந்திரமான பாலஸ்தீன அரசை நிறுவுதல் மற்றும் இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்தல் என்ற நடவடிக்கைகளின் மூலம் காஸா போரை விரைவாக முடிவுக்குக் கொண்டுவருவது அவசியமாகும்.

மூன்றாவதாக, யெமனைத் தளமாகக் கொண்ட ஹூதி கிளர்ச்சியாளர்கள் மூலம் வர்த்தகக் கப்பல்கள் மீதான அண்மைய தாக்குதல்கள் 'கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்திற்கு' சவாலாக உள்ளன. சுயஸ் கால்வாய், செங்கடல், பப்எல்மெண்டெப் மற்றும் ஏடன் வளைகுடாவுக்கான பிரவேசித்தல் மற்றும் அதனூடான போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும்.

மேலும், நாம் மீண்டும் ஒரு முறை சோமாலிய கடற்கொள்ளையர்களின் அச்சுறுத்தலுக்கு தொடர்ந்தும் முகங்கொடுத்து வருகின்றோம்.

கடலுக்கு கீழ் உள்ள கேபிள்களின் பாதுகாப்பு மற்றும் முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

இந்து சமுத்திரத்தின் இடம்பெறும் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் மனிதக் கடத்தல் அதிகரித்துள்ளன. சட்டவிரோதமான, அறியப்படாத மற்றும் கட்டுப்பாடற்ற (IUU) மீன்பிடித்தல் இன்னும் நிகழ்கிறது, இந்த அச்சுறுத்தல்கள் கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்திற்கு சவால்களை ஏற்படுத்துகின்றன.

இந்து சமுத்திரத்தில் கப்பல் போக்குவரத்தின் சுதந்திரம் குறித்து நாம் மீண்டும் கவனம் செலுத்த வேண்டியுள்ளதோடு, இந்து சமுத்திரத்தில் உள்ள நாடுகளின் சுதந்திரம் குறித்த கலந்துரையாடல்களை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை முன்வரும்.

நான்காவது விடயம், தொடர்பை விரிவாக்குவது. 2050ஆம் ஆண்டுக்குள் இந்தியா, இந்தோனேசியா போன்ற நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி எட்டு மடங்கு அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

தெற்கு மற்றும் மேற்கு ஆசியாவில் உள்ள வேறு சில நாடுகளிலும் இதே வளர்ச்சி ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக, கூடுதல் துறைமுக வசதிகள் மற்றும் புதிய போக்குவரத்து வழிகள் தேவைப்படுகின்றன. சுயஸ் கால்வாய் போதுமானதாக இருக்காது. இதனால் இந்தியாவில் இரண்டு புதிய இணைப்பு முயற்சிகள் குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். வெப்பமயமாதல் அளவு பசுபிக் பெருங்கடலை விட மூன்று மடங்கு அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும் இந்து சமுத்திரம் பகுதி முழுவதும் உள்ள கடலோரப் பகுதிகள் தொடர்ந்து கடல் மட்டத்தில் உயர்ந்து கடுமையான கரையோர அரிப்பை எதிர்கொள்கின்றது.

## இந்து சமுத்திரத்தின் கப்பல் போக்குவரத்துச் சுதந்திரம் குறித்து மீண்டும் கவனம் செலுத்தப்பட வேண்டும்

இந்து சமுத்திரம் ஆண்டுக்கு 3.7 மி.மீ என்ற விகிதத்தில் உயர்ந்து வருவதுடன், மேலும் தீவிர கடல் பேரழிவுகள் தவிர்க்க முடியாதவையாகிவிடும். இந்து சமுத்திரத்தில் உள்ள தீவு நாடுகள் பாதிக்கப்படக்கூடியவை. எனவே காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணிக்க போதுமான வளங்கள் அந்நாடுகளுக்கு வழங்கப்பட வேண்டும். கடலில் ஏற்படும் மாற்றங்கள் பருவ மழை சுழற்சி முறைகளையும் பாதிப்பதோடு, இந்து சமுத்திரத்தில் உள்ள விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பையும் பாதிக்கும்.

இன்று நாம் அனைவரும் நிச்சயமற்ற காலங்களில் வாழ்கிறோம்.இரண்டாம் உலகப்போர் மற்றும் பனிப்போரின் முடிவில் இருந்து நாம் அடைந்த ஸ்திரத்தன்மை சிதைந்து வருகிறது. உலகமயமாக்கல் மற்றும் பன்முகத்தன்மை சவால் செய்யப்பட்டுள்ளது.

காலநிலை நெருக்கடி உலகளவில் வர்த்தகம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளை பாதிக்கிறது, உணவு பாதுகாப்பு, வாழ்வாதாரம், விநியோகச் சங்கிலிகள், உயிர்பல்வகைமை மற்றும் கடல் போக்குவரத்து ஆகியவற்றை பாதிக்கிறது. நமது தலைவிதியை உலக சக்திகள் தீர்மானிக்கும் வரை நாம் காத்திருக்கலாம் அல்லது நமது போக்கை நாமே உருவாக்கலாம்.

அமைதியான மற்றும் பாதுகாப்பான இந்து சமுத்திரத்தினை உறுதி செய்வது, கடலோர மற்றும் கரையோர நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக நலன்களுக்காக கடல்களின் நிலையான பயன்பாட்டை எளிதாக்குகிறது. இந்து சமுத்திரத்தில் உள்ள முக்கியமான பிரச்சினைகளைக் கையாள ஒரு விரிவான திட்டம் தேவை.

ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்ட சாசனம்(1982) மற்றும் தேசிய நீதிமன்ற வரம்பிற்கு அப்பாற்பட்ட அல்லது திறந்த கடல் ஒப்பந்தத்திற்கு வெளியே கடலின் உயிர் பல்வகைமையைப் பாதுகாத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாடு தொடர்பான 2023 இல் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம் (BBNJ) அத்தகைய கட்டமைப்பை உருவாக்க தேவையான அடித்தளம் ஏற்கனவே உள்ளது.

கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்தின் சுதந்திரத்தைப் பாதிக்காத வர்த்தக நடவடிக்கை குறித்த நடத்தை விதிகள் மற்றும் காலநிலை நெருக்கடி மற்றும் இந்து சமுத்திரத்தின் நிலையான பயன்பாடு ஆகியவற்றைக் கையாள்வதற்கான சமமான வழிகாட்டும் கொள்கைகள் தேவை.

இந்த நடவடிக்கைகள், இந்து சமுத்திரப் பகுதிக்கான விரிவான பிராந்தியத் திட்டத்தை உருவாக்குவதற்கு மாற்றத்தை ஏற்படுத்துவதை உறுதி செய்வதல் இந்து சமுத்திர வலய நாடுகள் சங்கத்தின் (IORA) தலைவர்களுக்கு நிறைவேற்ற முடியுமாக உள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் தெரிவித்தார்.

## 05 ஆண்டுகளுக்குள் சுதந்திரமான பாலஸ்தீன அரசொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும்

## மானுடவியல்



152

"எச்சில் மயங்க உனக்கு இதனைத் தந்தவரைக் காட்டு" என்று சொல்லி, கையில் எடுத்த ஒரு சிறிய மாறுகொண்டோச்ச, பிள்ளையார் ஆனந்தபாஷ்பஞ் சொரிய உச்சியின் மேல் எடுத்தருளிய ஒரு திருக்கை விரலினாலே சுட்டி, ஆகாயத்திலே இடபாரூடராகி உமாதேவியாரோடு நின்றருளிய பரம சிவனைக் காட்டி, உள்ளே நிறைந்து எழுந்த சத்தியஞானத் திருமொழியினாலே, எல்லையில்லாத வேதத்தினுட்சிறந்த தாற்பரியங்களெல்லாவற்றையும் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் தமிழினாலே திருவாய்மலர்ந் தருளுதற்குத் திருவுளங்கொண்டு, அவ்வேதத்திற்கு ஆதியாகிய அக்ஷரத்தை மெய்யோடுபுணர்த்தி, தம்முடைய பாடல் சிவபெருமானுடைய திருச்செவியில் ஏறும் பொருட்டு முன்னர் அத்திருச்செவியையே சிறப்பித்து,

"தோடுடை யசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடை யசுடலைப் பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வ
னேடுடை யமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள் செய்த
பீடுடை யபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே"

என்று பாடத் தொடங்கியருளினார். சிவபெருமான் தமக்குப் பிழை செய்த ஆன்மாக்களும் பின் தம்மை வந்தடையின் அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்வாரென்பதை விளக்கும் பொருட்டு, தம்மை மதியாமல் தாம் வீற்றிருக்கின்ற திருக்கைலாசத்தை எடுத்துத் தன் வலியிழந்த இராவணன் பின் தம்மேல் இசைபாட அவனுக்கு அருள்புரிந்த திறத்தை எட்டாந் திருப்பாட்டிலும், எவ்வகைப்பட்ட சிறப்பினரும் சிவபெருமானை அன்போடு வழிபடினன்றி அவரை அடையார்கள் என்பதை விளக்கும் பொருட்டு, சிவபெருமான் தம்மை வணங்குகின்றவர்களுக்கே அருள்செய்வாரென நினைந்து அவரை வணங்காது வழுவாகிய மானத்தை மேற்கொண்டு மயங்கிய பிரமவிட்டுணுக்கள் இழிவாகிய பன்றியும் அன்னமுமாய்த் தேடியும் அடையாதவர்களாகிப் பின்பு திருவைந்தெழுத்தைத் துதித்தே உய்ந்த திறத்தை ஒன்பதாந் திருப்பாட்டிலும், வேதகாரணராகிய கடவுளை அடையுநெறியை அறிந்து உய்யாத சமணரும், புத்தருமாகிய கையர்களுடைய சமயங்கள் கபட மார்க்கங்கள் என்னுந் திறத்தைப் பத்தாந்திருப்பாட்டிலும், அமைத்துப் பாடியருளினார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# மும்மடங்கு பலன்களைக் கொடுக்கும் மாதம் மாசி

மாசி மாதம் மகத்தான மாதம். மாசி மாதத் தில் நம்முடைய வழிபாடுகளும் பூஜைகளும் மும்மடங்கு பலன்களைக் கொடுக்கும் என்பது ஐதீகம். மாசி மாதத்தின் செவ்வாய்க்கிழமை மிக விசேஷமான நாள்.

அதேபோல், மாசி மாதத்தில் வெள்ளிக்கிழமைகளில், சுமங்கலிகளை அழைத்து அவர்களுக்கு பாத பூஜை செய்து, அவர்களுக்கு முடிந்தால் மங்கலப் பொருட்களுடன் புடவை வைத்துக் கொடுக்கலாம். அல்லது மங்கலப் பொருட்களுடன் ஜாக்கெட் பிட் வைத்து தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, மஞ்சள் சரடு, குங்குமம், மஞ்சள் முதலானவற்றை வழங்கி நமஸ்கரிக்கலாம். சுமங்கலிகளை நமஸ்கரிப்பது விசேஷம். அதுவும் மாசி மாதத்தில் வேண்டிக்கொள்வது இன்னும் மகத்தான பலன்களைத் தரும் என்கிறார்கள் ஆச்சார்யர்கள்.

மாசி மாதத்தின் மகம் நட்சத்திரம் ரொம்பவே மகத்தானது. மாதந்தோறும் மகம் நட்சத்திர நாள் உண்டு என்றபோதும் மாசி மாதத்தின் மகம் நட்சத்திர நாள், மாசி மகம் என்றே போற்றப்படுகிறது. இந்நாளில், புண்ணிய நீராடுவது பாவங்களைப் போக்கும்; புண்ணியங்களைத் தந்தருளும் என்கின்றன ஞானநூல்கள்.

மாதந்தோறும் சிவராத்திரி நன்னாள் வருவது உண்டு. ஆனாலும் மாசி மாதத்தில் வருகிற சிவராத்திரி, மகா சிவராத்திரி என்று போற்றப்படுகிறது. மகா சிவராத்திரி நன்னாளில், சிவனாருக்கு நள்ளிரவிலும் பூஜைகள் நடைபெறும். விடிய விடிய ஒவ்வொரு கால பூஜையும் விமரிசையாக நடைபெறும். மாசி மக நட்சத்திரத்தில் பிறப்போர் ஜகத்தையே ஆள்வார்கள் என்றொரு சொல் உண்டு. அதேபோல், மாசிக் கயிறு பாசி படியும் என்பதும் பழமொழி. மாசி மாதத்தில்தான் பெண்கள் 'காரடையான் நோன்பு' எனும் பூஜையைச் செய்வார்கள். புது மாங்கல்யச் சரடு கட்டிக் கொண்டு வயது முதிர்வது சிறப்பானது.

மாசி மகம் என்பது விசேஷமான நாள். இந்தநாளில் செய்யும் தானங்களும் தர்மங்களும் பெருகும் என்பது ஐதீகம். மாசி மக நன்னாளில், புனித நீராடுவது விசேஷம். நம் வீட்டுக்கு அருகில் உள்ள ஆறு குளங்களில், நதிகளில் நீராடினாலே புண்ணியம்தான். முக்கியமாக, கோயில் நகரம் கும்பகோணத்தில் உள்ள மகாமகத் திருக்குளத்தில் நீராடுவது நம் பாவங்களையெல்லாம் நிவர்த்தியடையச் செய்யும் என்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள்.

மாசி மக நாளில், குலதெய்வத்தைத் தரிசிப்பதும் மகத்தான பலன்களைக் கொடுக்கக் கூடியது. எனவே மாசி மகம் நன்னாளில், புனித நீராடுவோம். குலதெய்வத்தை வணங்குவோம்.

# தமிழுக்கு பெரும் தொண்டாற்றிய சுவாமி விபுலானந்தர்



முத்தமிழ் வித்தகர் என்று அழைக்கப்படும் "சுவாமி விபுலானந்தர்" தமிழுக்கு தொண்டாற்றியவர்களில் மிகவும் முக்கியமானவர்.

தமிழையே மூச்சென்று சுவாசித்தார். இவர் ஆற்றிய தமிழ் பணிகளும் சமூக சேவைகளும் இவரை உயர் நிலைக்கு இட்டு சென்றது. ஆசிரியராக, தமிழ் பண்டிதராக, விஞ்ஞான பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறை பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக, மொழி பெயர்ப்பாளராக வாழ்ந்து தமிழுக்கும் சமூகத்துக்கும் பெரும் தொண்டாற்றினார்.

இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தின் காரைதீவு எனும் ஊரில் 1892 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 27 ஆம் திகதி இவர் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் சாமித்தம்பி தாயின் பெயர் கண்ணம்மா ஆவார்.

இவரது இயற்பெயர் மயில்வாகனன் என்பதாகும். ஆரம்ப கல்வியை கல்முனை மெதடிஸ் கல்லூரியில் கற்றார். மட்டக்களப்பு மைக்கல் கல்லூரியல் பின்பு ஆசிரியராகவும் பணியாற்றினார்.

1912 இல் கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் விஞ்ஞானம் பயின்று 1916 இல் அறிவியலில் பட்டம் பெற்றார்.

இவர் ஒரு தமிழ் ஆசிரியராக மட்டக்களப்பு மைக்கேல் கல்லூரியில் தனது கல்விப்பணியை துவங்கினார். பின்பு கொழும்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

மதுரை தமிழ் சங்கம் நடாத்திய தேர்வில் சித்தி பெற்று பண்டிதர் பட்டம் பெற்றார். இலங்கையில் இருந்து இந்த பட்டத்தை பெற்றுக்கொண்ட முதல் நபர் இவராவார்.

யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளினுடைய பழக்கம் துறவுள்ளம் படைத்த மயில்வாகனத்தை விபுலானந்தர் ஆக்கியது. இவர் துறவு பூண்டாலும் மக்களை விட்டு விலகவில்லை. சமூகத்தில் நிகழ்ந்த துன்பத்திலும் மகிழ்ச்சியிலும் பங்கெடுத்தவராவார்.

ஆச்சிரம வாழ்க்கை முடிந்து சுவாமி விபுலானந்தர் எனும் குரு பட்டத்தை இராமகிருஸ்ணரின் நேர் சீடரான சுவாமி சிவானந்தரிடம் இருந்து பெற்று கொண்டார். "பிரபோத சைதன்யர்" என்ற பெயரையும் பெற்றார். அந்நியர் ஆதிக்கத்தில் மதம், மொழி கலாச்சாரத்தில் இருந்த வீழ்ச்சியில் இருந்த தமிழ் சமூகத்தை இவர் தட்டி எழுப்பினார்.

அறிவியல் கல்வியானது தமிழில் போதிக்கப்பட வேண்டும் என்ற ஆர்வம் இவரிடம் இருந்தது. இவர் அறிவியல் கலை சொல்லாக்கத்துக்காக உழைத்திருக்கின்றார். யாழ்நூல் என்று மிகச்சிறந்த இலக்கியத்தை இவர் படைத்திருக்கிறார்.

இது பழந்தமிழரின் இசைக்கருவியான யாழ் பற்றி சிறந்த ஆராய்ச்சி நூலாக போற்றப்படுகின்றது. 14 ஆண்டு ஆராய்ச்சியின் பலனாக இந்த நூல் கிடைத்தது. தமிழ்சங்கம் வெளியிட்ட செந்தமிழ் எனும் இலக்கியத்தில் பல கட்டுரைகளை இவர் எழுதி இருந்தார்.

இவர் தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தெளிவாக கற்று அவற்றின் பெருமைகளை மக்களுக்கும் புரியும் படியாக தனது நூல்களிலும் கட்டுரைகளிலும் இவர் எழுதி இருந்தார்.

மகாககவி பாரதியாரின் மீது கொண்ட பற்றினால் அவரை முதன்மைப்படுத்தி தனது வாழ்வில் வாழ்ந்து காட்டினார்.

தாழ்த்தப்பட்ட மக்களும் மேன்மையடைய வேண்டுமென்று விரும்பினார். நவீன மனிதனுக்குத் தேவையான பழங்கால சிந்தனைகள் என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் புகழ் வாய்ந்தவையாக உள்ளன.

முத்தமிழை முதன்மைப்படுத்தி இவர் எழுதிய நூல்களும் ஆய்வுகளும் பெரும் புகழ் உடையனவாக காணப்படுகின்றன.

இவ்வாறு மிகச்சிறந்த தமிழ்ப்பணிகளை ஆற்றி தமிழையே பெருமைப்படுத்திய விபுலானந்தர் அவர்கள் 1947 ஆம் ஆண்டு ஆடி மாதம் 10 ஆம் திகதி உடல்நலக் குறைவினால் உயிர் இழந்தார்.

இறக்க முன்னரே தான் கனவு கண்டதனை போலவே மிகச்சிறந்த தமிழ் பணிகளை இவர் ஆற்றி சென்றிருக்கின்றார்.

இவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும் ஈழத்தில் பிறந்து ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பெரிய என்றால் மிகையல்ல.




# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 75



கடவுளின் கிருபையை பெற, ஆதாரமாக இருப்பது ஆண்மை பொருந்திய உழைப்பு மட்டுமே. அனைத்தும் துறந்து ஆண்மையுடன் கூடிய உழைப்பை மேற்கொண்டவனுக்கு, கடவுள் அருள்வார் அல்ல அருளியே தீர வேண்டும். எனவே உழைப்பை பராமாத்மா விரும்புவார். உழைத்தவர் உயர்வார். உழைப்பது அவமானமல்ல. எவனொருவன் உழைப்பை நம்பி, திட்டமிட்டு, உறுதியுடன் செயல்படுகிறானோ, அவன் மஹான் எனப் போற்றப்படுவான். இப்படிப் பட்டவனைத் தான் இவ் உலகம் தேடுகிறது.

தகுதியுடையவனே வெகுமதி பெறுகிறான். இது ஒரு தெய்வ நெறியாகும். 'எந்த ஒரு கோட்பாடும் கடவுளால் உருவாக்கப்பட்டு அவராலே செயல் வடிவம் பெறும்' என்பதே இறைச் சட்டம். இதை கடவுளே பின்பற்றவும் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் பின்பற்றாமல் போனால் இந்த பிரபஞ்சம் செயல்பட முடியாது. ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு அதை அலட்சியப்படுத்துவதோ அல்லது மீறுவதோ மானமுள்ள செயலாகாது. படைப்பு என்னும் சக்கரம் கோட்பாடு என்னும் அச்சாணியின் உதவியால் தான் சுழன்று கொண்டிருக்கிறது. அந்த கோட்பாட்டை உருவாக்கிய கடவுளே அதனை மீற முடியாது. அப்படி மீறிவிட்டால் அந்த கோட்பாடு அர்த்தமற்று போகும்.

உழைப்பவனை உயர்த்த வேண்டும் என்பது கடவுளின் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டின்படி உழைப்பவன் அதற்குரிய ஊதியம் பெற்றடைவான். ஆண்மை பொருந்திய உழைப்பாளியை கைதூக்கி விடும் கட்டாயம் கடவுளுக்கு இருக்கிறது. கடவுளின் ஆதரவு உழைப்பவனுக்கு இருக்கும் பொருந்திய போது எந்த சக்தியும், அரசும் அதை தடுக்க முடியாது.ஆண்டவன் கட்டளைக்கு முன் அரச கட்டளை அடி பணியும்.

மனவலிமை இழப்பது அல்லது தாழ்வு மனப்பான்மை கொள்வது என்பது மனிதனுக்கு மனிதனே தேடிக் கொள்ளும் ஒரு சாபக் கேடாகும். சரீர பலமிருந்தும், வெற்றி பெறுவதற்கான சாதனங்கள் உள்ள போதும். தாழ்வு மனப்பான்மை கொண்டவன், மனவலிமை இல்லாதவன் வாழ்வில் வெற்றி பெற இயலாது. உடல் வலிமை இல்லாத போதும், மன வலிமை உள்ளவன் வெற்றி பெறுவதற்கான சாதனங்களை உருவாக்கிக் கொள்வான்.

ஏதோ சில காரணங்களினால், சில சூழ்நிலைகளில் ஒருவன் மனவலிமை இழந்து விட்டான் என்றால், அவன் அந்த சாபக்கேட்டிலிருந்து வெளிவர முடியாது என்றில்லை. முயற்சித்தால் முடியாதது ஒன்றுமில்லை. சூழ்நிலை காரணமாக மனவலிமை இழந்தவன், அதிலிருந்து மெல்ல மெல்ல விடுபட முயற்சிக்க வேண்டும். அதற்காக அவன் தன் உடல் சக்தி முழுமையையும் ஈடுபடுத்தி தன் ஆண்மையை நிலை நாட்ட வேண்டும். தோல்வியடைந்ததும் அவநம்பிக்கை கொள்ளாமல் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். நிதானமாக முயற்சிக்கும் போது மனவலிமையும், நற்தகுதிகளும் நிச்சயம் உருவாகும்.

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**



19559) முருகா' என்று ஒருமுறை சொல்கிற பொழுது, முருகனோடு சேர்ந்து அருள் வழங்குபவர்கள் யார்?
**மும்மூர்த்திகள்**

19560) 'மு' என்றால் என்னவென்று அழைக்கப்படும்?
**'முகுந்தன்' என்று அழைக்கப் படும்.**

19561) 'முகுந்தன்' யாரைக் குறிக்கும்? **திருமாலை**

19562)'ரு' என்றால் என்னவென்று அழைக்கப்படும்?
**'ருத்ரன்' என்றழைக்கப்படும்**

19563)'ருத்ரன்' யாரைக் குறிக்கும்?
**சிவனைக் குறிக்கும்.**

19564) 'க' என்றால் யாரைக் குறிக்கும்? **கமலத்தில் அமர்ந்திருக்கும் கமலனான பிரம்மாவைக் குறிக்கும்.**

19565) மும்மூர்த்திகளுக்கும் உள்ள முதல் எழுத்துக்களை இணைத்தால் என்ன வரும்? **'முருக' என்று வரும்.**

19566) 'முருக' வருவதால், முருகனைக் கும்பிட்டால் என்ன நடக்கும்?
**மும் மூர்த்திகளின் அருளும் முருகன் மூலமாக நமக்கு வந்து சேரும் என்பது ஐதீகம்.**

19567) முருகன் அழித்த ஆறு பகைவர்கள் பற்றிக் கூற முடியுமா?
**ஆணவம், கன்மம், குரோதம், லோபம், மதம், மாற்சர்யம்.**

19568) மலைகளில் குடி கொண்டுள்ள குமரனுக்கு என்ன பெயர்?
**சிலம்பன்**

19569) விசாகன் என்று அழைப்பது யாரை?
**முருகனை**

19570) விசாகன் என்றால் என்ன பொருள்?
**மயிலில் சஞ்சரிப்பவன் என்பது பொருளாகும்.**

19571) முருகப்பெருமானின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் என்னென்ன இருக்கும்?
**அபயகரம், கோழிக்கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல் என்ற ஆறு ஆயுதங்கள்**

19572) இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் என்னென்ன இருக்கும்?
**வரமளிக்கும் கை, தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில் போன்றவை இருக்கும்.**

19573) முருகன் யாரால் தாங்கப் பட்டான்?
**கங்கையால்**

19574) முருகன் கங்கையால் தாங்கப்பட்டதால் ஏற்பட்டபெயர் என்ன?
**காங்கேயன்**

# பதுளை மாவட்ட ஆடற்கலைப் போட்டியில் வெற்றி பெற்றோர்



அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், இந்து சமய, கலாசார திணைக்களம் மற்றும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் அனுசரணையுடன் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தி வரும் ஆடற்கலைப் போட்டியின் பதுளை மாவட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில், கந்தேகெதர ஸ்ரீ வாணி அறநெறி பாடசாலையும்,செரண்டிப் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் அறநெறிப் பாடசாலையும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. கந்தேகெதர ஸ்ரீ வாணி அறநெறி பாடசாலை சார்பில் N.கவிசாலினி, G. லினுஷா, V.திபஹரனி, P.சுமித்ரா, S.சதுர்ஷினி, T. நதிஷா, J.கௌசல்யா, U. புவிக்ஸா, R. அபிலாஷினி , S.மல்லிகா ஆகியோர் பங்கு பற்றினார்கள்.

செரண்டிப், ஸ்ரீ சிவசுப்பிரமணியர் அறநெறிப் பாடசாலை சார்பில் M. நிலுக்ஷி, M. மிதுஷிக்கா, J. மிதுர்ஷன், K. சஸ்வின்காந்த், C. கபிஷ்னா, K. மிதுஷான், S. சப்ரித்தா, J.கீர்த்திகா, R. கிஷானி, S. திலக்ஷனா ஆகியோர் பங்கு பற்றினார்கள். இதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் யசோ பிரசாத் செய்திருந்தார்.

இவ்விரு அறநெறிப் பாடசாலைகளும் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் எதிர்வரும் 2024.03.02ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடத்தவுள்ள இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

# சேவையிலிருந்து நீக்கப்பட்ட 200 பஸ்கள் புனரமைத்து போக்குவரத்துக்கு இணைப்பு

## அமைச்சர் பந்துல குணவர்த்தன ஏற்பாடு





இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகள் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், சேவையிலிருந்து நீக்கப்பட்ட 200 பஸ்கள் புனரமைக்கப்பட்டு சேவைக்கு கொண்டு வரப்பட்டன. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய, புனரமைக்கப்பட்ட இப்பஸ் வண்டிகள் சேவைக்கு விடும் நிகழ்வு, பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் இ.போ.ச டிப்போக்களில் 852 பஸ்கள் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டன. மேலும் நாடளாவிய ரீதியில் 11 பிராந்திய வேலைக் தளங்கள் மற்றும் 107 இ.போ.ச டிப்போக்களின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் இந்தப் பஸ்களை மறுசீரமைக்கத் தொடங்கினர்.

2023ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த பஸ் புனரமைப்பு வேலைத்திட்டத்தின் முதற்கட்டத்தின் கீழ் சேவையிலிருந்து நீக்கப்பட்ட 193 பஸ்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 193 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. அதன் இரண்டாம் கட்டத்தின் கீழ் 201 பஸ்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. அதற்காக செலவிடப்பட்ட தொகை 270 மில்லியன் ரூபா. தற்போதைய விலையில் 200 புதிய பஸ்களை கொள்முதல் செய்தால், சுமார் 4,200 மில்லியன் ரூபா செலவு செய்ய வேண்டிய நிலை உருவாகும். புனரமைக்கப்பட்ட பஸ்களை நாளாந்தம் இயக்குவதன் மூலம் இலங்கை போக்குவரத்து சபைக்கு நாளாந்தம் சுமார் 10 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்கும்.

நிகர இலாபம் 04 மில்லியன் ரூபாய். அதன்படி, இந்த இருநூறு புனரமைக்கப்பட்ட பஸ்களை இயக்குவதன் மூலம் அதிகபட்சமாக 1,200 மில்லியன் ரூபா நிகர இலாபம் ஈட்ட முடியும். ஆண்டுக்கு குறைந்தபட்ச நிகர இலாபம் 900 மில்லியன் பெறலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்

(12.02.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
திட்டமிட்டும் முயற்சியோடும் செயல் புரிந்து காரியங்களில் வெற்றி பெறுவீர்கள் .சரியாக திட்டமிடுவதால் தர வரவுகள் தொல்லை தராமல் வந்து சேரும்.

**ரிஷபம் :**
வேலைகளில் அதிக கவனம் செலுத்தி விரைவாக செய்து முடிப்பீர்கள். சில காரியங்களில் தகுந்த நண்பர்களின் உதவியை நாடுவீர்கள்.

**மிதுனம்:**
வரவேண்டிய பணவரவுகள் கடின முயற்சிக்குப் பின் வந்து சேரும். உங்களிடம் உதவி கேட்டு வந்த உறவினர்களுக்கு தேவையான உதவிகளை செய்வதில் சிரமம் உண்டாகும்.

**கடகம்:**
சில காரியங்களில் எதிர்பார்க்கும் திருப்தியை அடைய முடியாது. திட்டமிட்டபடி பணவரவு இருந்தாலும் செலவும் அதிகரிக்கும்.

**சிம்மம்:**
காரியங்களை கவனத்தோடு செய்வது நல்லது. சில செயல்களில் திருப்தி இருக்காது. உத்தியோகத்தர்கள் சிலர் பவீண் பேச்சுக்களால் மன வேதனை அடைவர்.

**கன்னி:**
புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்க்கவும். முயற்சியோடு செய்யும் பல செயல்களில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**துலாம்:**
முயற்சியுடன் செயல்பட்டு பல காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நண்பர்களின் உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**விருச்சிகம்:**
சிறப்பான முயற்சிகளுடன் செயல்பட்டாலும் சில காரியங்களில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். பணவரவு சிறிது தாமதம் ஆகலாம்.

**தனுசு:**
நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பயணங்களின் போது கவனமாக இருங்கள்.

**மகரம்:**
சில செயல்களில் வெற்றிகரமான பலன்களை பெறுவீர்கள். கடிதம் மூலம் வரும் தகவல் நல்ல திருப்பத்தை தரும்.

**கும்பம்:**
எடுத்த காரியங்களில் தீவிர முயற்சியோடு பணியாற்றுவீர்கள். தளர்வடைந்த செயல்களை முடிக்க தக்கவர்களின் உதவியை நாட வேண்டியது இருக்கும்.

**மீனம்:**
முயற்சிகளில் தீவிரம் இருந்தாலும் திருப்தியான பலன்களை பெற சிறிது காலமாகலாம். செலவுகள் அதிகமாகவும் வரவுகள் குறைவாகவும் இருப்பதால் அவசர செலவுகளுக்கு நண்பர்களின் உதவியை நாட வேண்டியது இருக்கும்.

## தமிழக மீனவர் மீது...

அது தொடர்பில் தெரிவித்த போது; இந்திய கடற் தொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பில் வைத்து இனம் தெரியாதவர்களால் தாக்கப்படுவதாகவும் அவர்களது மீன்பிடி படகுகளை தாக்கி சேதப்படுத்துவதாகவும் தமிழகத்திலிருந்து முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை கடற் படை முற்றாக மறுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் தினமும் நூற்றுக்கும் அதிகமான இந்திய மீனவர்கள் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அதனைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் கடற்படையினர் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர். எனினும் அது சாத்தியப்படாத போதே இந்திய மீனவர்கள் சிலர் கைது செய்யப்படுகின்றனர். அதன் போது கடற்படையினர் அத்துமீறும் இந்திய மீனவர்கள் மீது ஒருபோதும் தாக்குதல் நடத்தவில்லை. அறிவுறுத்தல்கள் மட்டுமே வழங்கப்படுகிறது. அவர்களது அத்துமீறல் நடவடிக்கைகள் இலங்கை மீனவர்களுக்கு பாதகமாக அமைவதாலேயே இலங்கை கடற் பரப்பிலிருந்து விலகி தொழிலை மேற்கொள்ளுமாறு தமிழக மீனவர்களுக்கு கடற்படை அறிவுறுத்தியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் இலங்கை மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறலாம். எனினும் அது நிச்சயம் எமது கண்காணிப்பில் இடம்பெறுவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முதற்கட்டமாக 1,300 வீடுகள்...

அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் பத்தாயிரம் வீட்டுத் திட்டத்தின் கீழ் எதிர் வரும் 19ஆம் திகதி மேலும் 1300 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட உள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

## இலங்கையில் இன்று முதல்...

நகரில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இலங்கையிலுள்ள இலங்கை தூதரகமும் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. Unified Payments Interface என்ற ஒருங்கிணைந்த கட்டணம் செலுத்தும் முறைமை 2016 ஆம் ஆண்டில் இந்திய தேசிய கொடுப்பனவு கூட்டுத்தாபனத்தினால் உடனடி பணம் செலுத்தும் முறைமையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இது பல வங்கிக் கணக்குகளை, ஒரே கைபேசி செயலி, ஊடாக இணைக்கும் அமைப்பாகும், இந்த கட்டண முறை, கைபேசிகள் மூலம் வங்கிகளுக்கு இடையேயான மற்றும் தனிப்பட்ட வர்த்தக பரிவர்த்தனைகளை எளிதாக்குகிறது. இதன் மூலம் இலங்கையின் சுற்றுலா வர்த்தகம் மேம்படும் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டிலுள்ள இலங்கையரால்...

அனுப்பியுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

2023 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த அதிகரிப்பு 11.4 வீத உயர்வடைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சுற்றுலாப் பயணத்துறையை குறிப்பிடும்போது தற்போது பெப்ரவரி மாதத்தின் முதல் 08 நாட்களில் 60,122 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை வந்துள்ளனர். 2024 இல் இதுவரை 2,68,375 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். சுற்றுலாப் பயணிகளில் அதிகளவானோர் இந்தியாவிலிருந்தே 42,768 பேர் வருகை தந்துள்ளனர். ரஷ்யாவிலிருந்து 39,914 சுற்றுலா பயணிகளும், பிரிட்டனிலிருந்து 22,278 சுற்றுலா பயணிகளும், ஜெர்மனியிலிருந்து 18,016 சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுங்கத்தில் அனுமதி பெறாத...

செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 156 வாகனங்கள் தொடர்பான தகவல்களை ஆணைக்குழு அதிகாரிகள் இனம் கண்டுள்ளதாகவும் அவற்றில் பெரும்பாலானவை சொகுசு வாகனங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க இந்த வாகனங்கள் பல ஆண்டுகளுக்குப் பின்னர் போலியாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படுவதால் அரசாங்கத்துக்கு பாரிய வரி இழப்பு ஏற்பட்டுள்ளது.இத்தகைய பின்னணியில் மேற்படி வாகனங்களில் 07 வாகனங்களை தற்போதைய உரிமையாளர்களிடமிருந்து பெற்று சுங்கத்தில் ஒப்படைக்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.அதன்படி 06 வாகனங்கள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 05 வாகனங்கள் இலங்கை சுங்கப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## கல்லீரல், செவிப்புலன்...

இலட்சம் ரூபா (10,00,000/) வழங்கப்படும். அத்துடன், இலங்கையில் 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் செவிப்புலன் மாற்று சத்திரசிகிச்சை தேவைப்பாட்டுடன் பிறப்பதாக மருத்துவ பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளில், இந்த அறுவை சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளை பிறக்கும்போதே கண்டறிந்து, பிறக்கும்போதே தேவையான அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. இலங்கையில் கூட, இவ்வாறான குறைபாடுகள் குழந்தைகள் பிறக்கும்போதே கண்டறியப்படுகிற போதும் அவர்கள் அனைவருக்கும் இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுவதில்லை. இவ்வாறான குழந்தைகள் பிறந்து 02 வருடங்களுக்குள் குழந்தையின் மூளை வளர்ச்சிக்காக இந்த சத்திரசிகிச்சையை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர் தெரிவிக்கின்றார். இந்த சத்திரசிகிச்சைக்கு ஐம்பது இலட்சம் ரூபா அல்லது அதனை விட அதிக தொகை செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இந்த அறுவை சிகிச்சை ஒரு சில அரசாங்க மருத்துவமனைகளில் மட்டுமே செய்யப்படுவதால், நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் அரசு மருத்துவமனைகளில் இதற்காக காத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டியுள்ளது. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பெரியாஸ்பத்திரியில் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு இதற்காக பயன்படுத்தப்படும் கருவியின் (Implant) பெறுமதி சுமார் 34 மில்லியன் ரூபாவாகும். சுகாதார அமைச்சினால் இந்த கருவி ஸ்ரீ ஜயவர்தனபுர பெரியாஸ்பத்திரியில் இலவசமாக வழங்கப்பட்ட போதிலும், சத்திரசிகிச்சைக்கான செலவு 06 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும். இதற்குத் தீர்வாக சுகாதார அமைச்சிடமிருந்து இந்த கருவியைப் (Implant) பெற்று, சத்திரசிகிச்சைக்கான செலவான ஆறு இலட்சம் ரூபாய் ஜனாதிபதி நிதியில் இருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, ஸ்ரீ ஜயவர்தனபுர பெரியாஸ்பத்திரியில் மேற்கொள்ளப்படும் இந்த சத்திரசிகிச்சைக்கான முழு செலவையும் அரசே ஏற்கும்.

இவ்வாறான குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யாமல் இருப்பது சமூகத்துக்கும் சுகாதார அமைப்புக்கும் தீங்காகவே இருக்கும். இந்த சத்திரசிகிச்சைக்காக பெருமளவு பணம் செலவழிக்க வேண்டியுள்ள போதிலும் சிறு குழந்தைகளுக்கு மேற்கொள்ளப்படும். இவ்வாறான சத்திரசிகிச்சைகளுக்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி உதவி வழங்குவது நாட்டுக்கான எதிர்கால முதலீடாகும். எனவே, ஜயவர்தனபுர பெரியாஸ்பத்திரியில் குழந்தைதகளுக்கு மேற்கொள்ளப்படும் செவிப்புலன் மாற்று சத்திரசிகிச்சைக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து 01012024 முதல் அதிகபட்சமாக ஆறு இலட்சம் ரூபா வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார்.

## யாழ். முற்றவெளி சம்பவம்...

நிகழ்ச்சி ஏற்பாடுகள் முறையான விதத்தில் கையாலாமையே அங்கு ஏற்பட்ட குழப்ப நிலைக்குக் காரணமென அரசியல் மற்றும் சமூக தரப்புகளில் இருந்து அறிக்கைகளும் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ். முற்றவெளியில் நடைபெற்ற Hariharan Live in Concert and Star Night தொடர்பாக பல்வேறு விமர்சனங்களை இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலிருந்தும் அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும், அதனூடாக முதலீடுகள் கொண்டுவரப்படுவதும் வரவேற்கப்பட வேண்டியதாக இருந்தாலும், நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்களில் நெகிழ்வுப் போக்கு இருக்கக் கூடாது. இசைநிகழ்வில் இடம்பெற்ற அசாதாரண நிலை என்பது முறையான திட்டமிடல் செய்யப்பட்டிருந்தால் கட்டுப் படுத்தக்கூடியதாகவே இருந்திருக்குமென பலர் குறிப்பிடுகின்றனர்.

நிகழ்ச்சி தொடர்பான அறிவிப்புகள், நுழைவுச்சீட்டுகளினால் ஏற்பட்ட குழப்பங்கள், பங்கேற்கும் கலைஞர்களில் இறுதி நேரத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள், மைதான ஏற்பாடுகள், பாதுகாப்பு சார் குறைபாடுகள் என பல்வேறு சர்ச்சைகள் நேற்றைய குழப்பத்தின் காரணிகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன. மறுபக்கத்தில் நிகழ்வை பார்வையிடச் சென்ற மக்களை தரக்குறைவாக சித்தரிக்கும் வகையிலும் சிலர் விமர்சிக்கின்றனரென்றும் அவர் தெரிவித்துள்ளார். அவர்களில் சிலர் செய்த பிழைகளை ஒட்டுமொத்த யாழ்ப்பாண மக்கள் மீது திருப்புவதென்பது திட்டமிட்ட அரசியலாகவே தென்படுகிறது.

தவறிழைத்த மக்களை நான் கண்டிப்பதோடு, மண்ணுக்கு வருகை தந்திருக்கும் விருந்தினர்களை சங்கடப்படுத்தாமல் பார்த்துக்கொள்வதும் எமது மரபுசார் பண்பாடு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

ஆக்ரோசமான மனநிலையில் இருக்கும் மக்களை கையாள்வது என்பது தனித்துவமான ஆளுமைத்திறன். அதிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் முற்பதிவு செய்துள்ளனர் எனத் தெரிந்திருந்த போது அதற்கான ஏற்பாடுகள் மிகக் கச்சிதமாக செய்யப்பட்டிக்க வேண்டும்.

யாழ். மாநகரசபை, பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட அனைவரும் கூடுதல் பொறுப்போடு நடந்திருக்க வேண்டும், அவர்களுக்கான சரியான தகவல்களை ஏற்பாட்டாளர்கள் வழங்குவதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

ரசிகர்களை கட்டுப்படுத்தும் பணிகளில் மாணவர்கள் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாக அறிந்துகொண்டேன். இத்தகைய பணிகளில் முன் அனுபவம் இல்லாத மாணவர்களைக் கொண்டு பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை கையாள எடுக்கப்பட்ட முடிவு என்பது மிகவும் ஆச்சரியமானதாகவும் தவறான முன்னுதாரணமாகவும் அமைகிறது.

ஏற்பாடுகளில் செய்யப்படும் தவறுகள் பெரு நிகழ்ச்சியொன்றின் முடிவை முற்றிலுமாக மாற்றிவிடும் என்பதற்கு இந்த இசைநிகழ்ச்சி ஓர் உதாரணமாகி விட்டது என்பது வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு, நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் சார்பில் ஊடகங்களில் வெளியிடப்பட்ட கருத்துகள், குறிப்பாக "யாழ்ப்பாணம் வர யாருக்கும் விருப்பமில்லை. நாம் சமாளித்து வர வைத்துள்ளோம்..." உள்ளிட்ட கருத்துகளின் தாக்கமும் இந் நிகழ்வில் தாக்கத்தை செலுத்தியிருக்க வாய்ப்புகள் உள்ளன. அவர்கள் சொல்ல வந்த கருத்து வேறாக இருக்கலாம், பயன்படுத்திய வார்த்தைகள் மற்றும் தொனிகள் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

## 35 வருடங்கள் தேடப்பட்டு வந்த...

இலங்கை மின்சார சபை தரப் பரிசோதகர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். கொலை செய்யப்பட்ட நபரின் மனைவி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதன்படி அத்துருகிரிய வெல்லவ பிரதேசத்தில் வசிக்கும் கணவன், மனைவியை பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர். அப்போது கைது செய்யப்பட்ட 30 வயது மதிக்கத்தக்க பெண் மின்சார சபையில் ஆங்கில தட்டச்சாளராக பணியாற்றி வந்ததும், கொலை செய்யப்பட்ட நபருடன் தவறான தொடர்பு வைத்திருந்ததும் தெரியவந்தது. 1989 ஆம் ஆண்டு ஒரு குறிப்பிட்ட நாளில், இது தொடர்பான உறவு தனது கணவருக்குத் தெரியவந்ததையடுத்து, அந்தப் பெண் தனது கள்ளக் காதலரை அத்துருகிரிய, வெல்லவயில் உள்ள தனது வீட்டுக்கு அழைத்துள்ளார். அங்கு கணவருடன் சேர்ந்து கள்ளக் காதலரை துண்டு துண்டுகளாக வெட்டி கொலை செய்து பீப்பாயிலிட்டு கிணற்றில் போட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து, கணவன்மனைவி இருவரும் 06 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு விடுவிக்கப்பட்ட தம்பதியினர் பின்னர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, அவர்கள் இல்லாமல் நடத்தப்பட்ட விசாரணைக்குப் பிறகு, தம்பதியருக்கு 2019 இல் மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், கொலையை செய்த தம்பதியை எந்த பொலிஸாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில், கொலையைச் செய்த பெண், பண்டாரகம பமுனுகம பிரதேசத்தில் வாடகை வீட்டில் பதுங்கி இருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் படுகொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குத் தகவல் கிடைத்திருந்தது. அதன்படி விசாரணை அதிகாரிகள் நேற்று (09) அவரை கைது செய்தனர். தற்போது, ஒரு குழந்தைக்குத் தாயான பெண்ணுக்கு 64 வயதாகும்.

பிணை வழங்கப்பட்ட பின்னர் கடந்த 35 வருடங்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள உறவினர்களின் வீடுகளில் தம்பதியினர் தலைமறைவாகி வாழ்ந்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரிடம் சிக்கிக் கொள்வோமோ என்ற அச்சத்தில் தாமும் கணவரும் தற்போது பிரிந்து வாழ்ந்து வருவதாக குறித்த பெண் தெரிவித்துள்ளார். எனினும் அவரது கணவர் இதுவரை கைது செய்யப்படவில்லை. சந்தேகநபரான பெண் (10) ஹோமாகம நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு இன்று 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## ஜனாதிபதி ரணில்...

விக்கிரம சிங்க கடந்த 08 ஆம் திகதி இரவு அவுஸ்திரேலியாவுக்கு பயணமானார்.

07ஆ வது இந்து சமுத்திர மாநாட்டில் முக்கிய உரையை ஆற்றிய ஜனாதிபதி, பல நாடு களின் அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார்.

## சமூக ஊடகங்களில் அவதூறு...

அரசியல் பிரமுகர் ஒருவரது ஆதரவுடன் குறித்த சந்தேக நபர் சேறுபூசும் வகையில் இந்த அவதூறான பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் அந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாணந்துறை பகுதியில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், எதிர்காலத்தில் அந்த அரசியல்வாதியின் பெயரை வெளிப்படுத்தமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொழும்பு, யாழ். உட்பட...

காற்றின் தரக் குறியீட்டிற்கு இணங்க நாட்டில் நுவரெலியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் காற்றின் தரம் பலவீனமானவர்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கும் மட்டத்தில் காணப்படுவதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ்...

சட்டமும் அதன் நிகழ்கால முக்கியத்துவமும்' என்ற தலைப்பில் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் எம்.சொர்ணராஜா உரை நிகழ்த்தவுள்ளார். சர்வதேச திட்ட ஆலோசகர் கேப்டன் ஏ.ஜி.ஏ. பாரி மற்றும் கொழும்பு டைம்ஸ் ஆசிரியர் எம்.சி. ரசூல்தீன் இந்தக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர்.

கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அறக்கட்டளையின் தலைவர் காலித் எம்.ஃபாரூக் மற்றும் அகில இலங்கை வைஎம்எம்ஏ மாநாட்டின் தேசிய தலைவர் இஹ்சான் ஏ.ஹமீட், ஆகியோர் நிகழ்வுக்கு இணைத் தலைமை தாங்குவர். பேராசிரியர் சொர்ணராஜா தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கொழும்பு ரோயல் கல்லூரியில் கற்றார். அவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் எல்.எல்.பி (முதல் வகுப்பில்) பட்டம் பெற்றார் மற்றும் சட்ட பீடத்தில் விரிவுரையாளராக இருந்தவர். அமெரிக்காவின் யேல் சட்டக் கல்லூரியில் முதுகலைப் பட்டமும் (எல்.எல்.எம்) லண்டன் கிங்ஸ் பல்கலைக்கழகத்தில் எல்.எம் மற்றும் கலாநிதி பட்டங்களையும் பெற்றார்.

இவர் தஸ்மேனியா பல்கலைக்கழகத்தில் சட்டக் கலலூரியின் தலைவராக பதவி வகித்தவர். ஓய்வு கால விடுப்பின் போது அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு முதலீடுகளுக்கான சர்வதேச சட்டம் தொடர்பான புத்தகத்தை எழுதினார். இது இந்தத் துறையில் அவரது புகழை நிலைநிறுத்தியது.

## சம்பள விவகாரத்தில்...

செயற்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

எனவே, தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## முன்னாள் அமைச்சர்...

குடும்ப உறுப்பினர்களிடம் அவர் பற்றிய தகவல்களை கேட்டறிந்த ஜனாதிபதி, காமினி ஜயவிக்ரம பெரேராவின் வீட்டுக்கருகில் ஒன்று கூடிய பிரதேச மக்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார். முன்னாள் அமைச்சர் அகில விராஜ் காரியவசம், காமினி ஜயவிக்கிரம பெரேராவின் புதல்வரும் வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அசங்க ஜயவிக்கிரம, குருநாகல் மாவட்ட அரசியல்வாதிகள், பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

## 42 ஆவது ஆண்டு விழா...

(03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்படுமென இலங்கை ருபவாஹினிக் கூட்டுத்தபானத்தின் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். ரூபவாஹினி 42ஆவது ஆண்டை முன்னிட்டு நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். இம் மாநாட்டின்போது கபில தசநாயக்க (பிரதிப் பணிப்பாளர்), சதிஸ் நீலகண்டன் (சந்தைப்படுத்தல் முகாமையாளரும்) கலந்து கொண்டனர். இங்கு மேலும் கூட்டுத்தபாணத்தின் தலைவர் தகவல் தருகையில்,

சிறிய விளம்பரங்கள் தொலைக்காட்சியில் நிகழ்சிகளின் போது கீழ் தளத்தில் எழுத்துவடிவில் அல்லது படத்துடன் விளம்பரங்களை காட்சிப்படுத்த விரும்பினால் அதற்கான விளம்பரங்களையும் லேக் ஹவுஸ் நிறுவனம் அதற்கான கட்டணத்தை அறவிட்டு ருபாவாஹினிக்கு அனுப்பினால் அவைகள் தொலைக்காட்சியின் நிகழ்ச்சியின் போது விளம்பரப்படுத்தக் கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் சகல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் இணைய வானொலியூடாகவும் ஒலிபரப்படும். நேத்ரா தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில், கொழும்பில் நடைபெறும் இசை கலை நிகழ்ச்சிகள் நேரடியாக ஒளிபரப்படும். அதற்கான அனுசரணைகளைப் பெற்றுள்ளன. அத்துடன் எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்குச் சென்று அங்கு சில நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்வரும் நோன்பு காலத்தில் நோன்பு நிகழ்வுகளையும் மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களிலும் ஒளிபரப்பப்படும்.

## 70 இலட்சம் முட்டைகள்...

(03 ஆம் பக்க தொடர்ச்சி)

கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்டுள்ள 70 இலட்சம் முட்டைகள் நாட்டுக்கு கிடைத்துள்ளதுடன் அந்த முட்டைகள் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்த வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரச வணிக பலநோக்குக் கூட்டுத்தாபனம் இந்த வருடத்தின் முதல் தொகை முட்டையை இறக்குமதி செய்துள்ளது. அந்த வகையில் 70 இலட்சம் முட்டைகள் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.



தெஹிவளை ஸ்ரீ ஜெயவீர பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலய ஸ்ரீ சிவன் நூதன மஹா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

படங்கள் : ராமதாஸ்



அரபு சிறுத்தைகளுக்கான சர்வதேச தினத்தின் (10.2.2024) நிமித்தம் கொழும்பிலுள்ள சவுதி அரேபிய தூதரகம் கொழும்பு காலி முகத்திடலில் கேட்வாக் 2024 என்ற தொனிப்பொருளில் நடைபவனியொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் நடைபவனி இடம்பெறுவதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

# பாணின் நிறை, விலையை காட்சிப்படுத்த கோரிக்கை

**திறப்பனை தினகரன் நிருபர்**

பாணின் நிறை மற்றும் அதன் விலையை காட்சிப்படுத்துவது கட்டாயம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நுகர்வோர் விவகார அதிகார சபை இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதென தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலையும் மீறி விற்பனையில் ஈடுபடும் வர்த்தகர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள், சுற்றி வளைப்புகள் மேற் கொள்ளப்படவுள்ளன. ஒரு இராத்தல் பாணின் நிறை 450 கிராம் ஆகவும் அரை இராத்தல் பாணின் நிறை 225 கிராமாகவும் இருக்க வேண்டியது கட்டாயம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பாணின் நிறை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் பல்வேறு வகையான பாண் வகைகள் விற்பனை செய்யப்படுவதால் அவற்றுள் எவ்வகையான பாணின் நிறை பற்றி அறிந்து கொள்வதில் கடினம் இருப்பதாக பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சாதாரணமாக நுகர்வோரால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் காணப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





கொழும்பு 9, தெமட்டகொடை, ஆராமய பிளேஸ் அருள் மிகு ஸ்ரீ பத்தரகாளி அம்மன் ஆலயத்தின் வருடாபிஷேக அலங்கார உற்சவ தேர்பவனி விழா ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிவகுமார் குருக்கள் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

படங்கள். எம். நசார்


## காணி அமைச்சு

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

## குத்தகை அடிப்படையில் கட்டிமொன்றை பெற்றுக்கொள்வதற்காக விலைமனு கோரல்

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக பத்தரமுல்ல அல்லது அதன் சுற்றுப்புறத்தில் 5 கிலோ மீற்றர் எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் அடிப்படைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் வருடாந்தம் நீடித்துக்கொள்ளும் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஏறத்தாழ 20000 சதுர அடி அலுவலக இடவசதி சகிதம் (Office area) நீர், மூன்றுநிலை மின்சாரம், வாகனத் தரிப்பிட வசதிகள் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளைக் கொண்ட வளிச்சீராக்கம் செய்யப்பட்ட கட்டிடமாகவிருத்தல் வேண்டும்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத ரூபா 5000.00 + VAT = SSCL தொகையைச் செலுத்தியதன் பின் குறித்த கட்டிடத்திற்கு இருக்க வேண்டிய முழுமையான விபரங்கள் சகிதம் தயாரிக்கப்பட்ட விலைக்கோரல் படிவங்களை நிதிப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-03-04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் இல. 475, கடுவலை வீதி, பத்தரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்தவுடன் குறித்த விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் வழங்குநர்கள் கலந்துகொள்ளலாம்.

விலைமனுக்கள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை காணிச் சீர்திருத்த ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**சட்டத்தரணி பண்டுகாபய ஹர்ஷ கீர்த்தினந்த,**
**தலைவர்,**
**காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழு.**



## இலங்கை பத்திரிகை பேரவை

## அறிவித்தல்

இலங்கை பத்திரிகை பேரவையின் வருடாந்த (2024) ஆண்டுக்கான பதிவுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகை தனது பெயரை முன்மொழிந்துள்ளது.

நாம் மனிதர்கள் --'ஜூனியர் தமிழன்'

அதன்படி, மேற்குறிப்பிட்ட பெயர் தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பின் இந்த விளம்பரம் வெளியாகி இரண்டு (02) வாரங்களுக்குள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி அல்லது தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பத்திரிகை ஆணையாளர்,
இலங்கை பத்திரிகை பேரவை
இல: 155/15, காசல் வீதி,
பொரளை,
கொழும்பு - 08

தொலைபேசி இல. - 011-2693272/ 011-2693274
தொலைநகல் - 011-2693271
மின்னஞ்சல் - info@slpc.lk



## தென் மாகாண சபை
## தென் மாகாண பிரதான செயலகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**புகைப்படப் பிரதி இயந்திரங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல்**

தென் மாகாண பிரதான செயலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைக்கோரல் இல. | விபரம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|
| SPC/CS/NCB/2024/01 | புகைப்படப் பிரதி இயந்திரங்கள் | 06 | 2,000.00 | 60,000.00 |

02. இதன்பொருட்டு விலைமனுக்களைச் சமர்ப்பிக்க விரும்பும் நிறுவனங்கள் தென் மாகாண பிரதான செயலாளருக்கு எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து, 2024 பெப்ரவரி 13ஆம் திகதி முதல் 2024 மார்ச் 04ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி காலி, எஸ்.எச். தஹநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள தென் மாகாண பிரதான செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. 60,000.00 ரூபா பெறுமதியான 2024 ஜூன் மாதம் 01ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள எந்தவொரு வங்கியிலிருந்தும் தென் மாகாண பிரதான செயலாளர் பெயரில் பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறி அல்லது பிரதான செயலகத்தின் கணக்குப் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டு சகிதம் சமர்ப்பித்தல் வேண்டும். காசுக் கட்டளை மற்றும் வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2024 மார்ச் மாதம் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் செயலாளர், பிரதான செயலகம், எஸ்.எச். தஹநாயக்க மாவத்தை, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து பிரதான செயலகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

05. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம்: (**SPC/CS/NCB/2024/01**) மற்றும் ''புகைப்படப் பிரதிக்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் 2024 மார்ச் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்தவுடன் பிரதான செயலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரம் வாய்ந்த பிரதிதிநியொருவர் கலந்துகொள்ளலாம். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

கவனிக்கவும்: கேள்வி அறிவித்தலை தென் மாகாண பிரதான செயலகத்தின் www.cs.sp.gov.lk எனும் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதான செயலகம்,**
**தென் மாகாணம்.**
**தொலைபேசி இல.: 091-4944016/091-4946368**
**மின்னஞ்சல்: procurementplan1@gmail.com**
**திகதி: 2024-02-12.**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2024.02.10
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5386 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,396,384.00
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 0 0 0 0 6 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3628 — சீட்டிழுப்பு திகதி 2024.02.10 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,722,059.12
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 06 34 36 51 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 96816

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1734 — 2024.02.10 — 51427 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 423,459,302.00
ஆங்கில எழுத்து X — சுப்பர் இலக்கம் 16 — வெற்றி இலக்கங்கள் 10 24 28 36
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.02.10 — சீட்டிழுப்பு இலக்கம் 0212
ஆங்கில எழுத்து Y — L7 எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 0 1 0 7 8 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 24,890,868.48

ராசி சுப பலன் — திகதி 2024.02.10 — சீட்டிழுப்பு இலக்கம் 695 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,207,598.04
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 04 28 53 58 — தனயோக இலக்கம் 30163 — நாளுக்கான விதி எண் 10

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1416 — 2024.02.10 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 134,963,284.00
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 01 06 32 80 — விசேட எழுத்து A — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 07550



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2024.02.09
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5385 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,219,032.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 9 1 8 5 0 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3627 — சீட்டிழுப்பு திகதி 2024.02.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 65,501,823.52
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 01 08 28 59 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 35067

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1733 — 2024.02.09 — 05819 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 423,362,122.00
ஆங்கில எழுத்து H — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 10 26 39 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.02.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0211
ஆங்கில எழுத்து W — L7 எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 7 6 7 2 1 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 24,823,856.20

ராசி சுப பலன் — திகதி 2024.02.09 — சீட்டிழுப்பு இலக்கம் 694 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,098,253.40
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 27 40 47 56 — தனயோக இலக்கம் 08702 — நாளுக்கான விதி எண் 09

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1415 — 2024.02.09 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 134,748,616.00
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 15 46 49 61 — விசேட எழுத்து B — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 41430

# கிழக்கின் குரல்



# தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் 16ஆவது பட்டமளிப்பு விழா






**ஒலுவில் விசேட, பாலமுனை தினகரன் நிருபர்கள்**

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை (10) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் ஆரம்பமானது.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் மற்றும் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபா தலைமையில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவின் முதல் அமர்வின் விசேட பேச்சாளராக அமெரிக்க இலங்கை புல்பிரைட் ஆணைக்குழுவின் புதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பெட்ரிக் மெக்னமாரா கலந்து கொண்டு உரையாற்றினார்.

முதலாம் நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பட்டதாரிகளும் இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பட்டதாரிகளும், மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பட்டதாரிகளும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். 2016/2017 ஆம் கல்வி ஆண்டில் அரசியல் மற்றும் சமாதான கற்கைதுறையில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம். எல்.ஏ. காதர் விருதை முகம்மது அமீர் மர்யம் பெற்றுக் கொண்டார்.

தமிழ் துறையில் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருதை முஹம்மட் அலி றீஷா நூர் பெற்றுக் கொண்டார்.

ஹிந்து கலாச்சார துறையில் சிறந்த மாணவருக்கான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஞாபகார்த்த விருதை வனிதா உதயகுமார் பெற்றுக் கொண்டார்.

இஸ்லாமிய சிந்தனைகள் மற்றும் நாகரிகம் என்ற துறையில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம்.ஏ. எம். சுக்ரி ஞாபகார்த்த விருது நூறுல் ஸிபா ஜாபீறுக்கு வழங்கப்பட்டது.

இஸ்லாமிய வங்கி மற்றும் நிதி துறையில் சிறந்த மாணவருக்கான இஸ்மாயில் டீன் மரிக்கார் விருது செயினுல் ஆப்தீன் சாஜித் பெற்றுக்கொண்டார்.

மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்பவியல் பீட மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்பட்டன.

விழாவின் மூன்றாவது அமர்வில் விசேட பேச்சாளராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தவிசாளர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி உடவத்த கலந்து கொண்டு உரையாற்றினார்.

# கிண்ணியாவில் உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு



**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா நடுஊத்து பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வறிய மக்களுக்கான உலர் உணவுப் பொதிகள் ஞாயிற்றுக்கிழமை (11) அல் றவ்ழா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

தன்னார்வ தொண்டு நிறுவனமான அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேசனினால் IHHNL எனும் சர்வதேச தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் அதன் பிரதிநிதி அப்துர் ரஹ்மான் காதிரி சியின் பிரசன்னத்துடன் பெறுமதிமிக்க பொதிகள் வழங்கப்பட்டன.

அல் ரவ்ழா வித்தியாலயத்தின் அதிபர் கானுதீன் பிர்தௌஸின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், கிண்ணியா பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சமூக சேவையாளர் அல் ஹித்மதுல் உம்மா பௌண்டேசனின் தலைவர் பாதிஹ் கஸ்ஸாலியும் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

# புனித மிக்கேல் கல்லூரி பழைய மாணவர் சங்க கூட்டம்

**காரைதீவு குறூப் நிருபர் சகா**

இலங்கையின் புகழ் பெற்ற மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர் சங்க தாய்க்கிளையின் 116வது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிருவாக தெரிவும் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

புனித மிக்கேல் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் பழைய மாணவர் சங்க தாய்க்கிளையின்தலைவரும் இயேசுசபை துறவியுமான வண.அருட்தந்தை. ரி.சகாயநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நடைபெறவுள்ள வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆயுட்கால அங்கத்தவர்கள் அனைவரையும் அழைக்கப்படுகிறார்கள்.

# கோட்டைக்கல்லாறு பிரதேசங்களில் வெற்றுப் போத்தல்கள் அகற்றல்

**காரைதீவு குறூப் நிருபர்**



மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு பிரதேசங்களில் காணப்படும் வெற்றுபோத்தல்களை அகற்றும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் வெள்ளிக்கிழமை (09) இடம்பெற்றது.

இதன்போது கோட்டைக்கல்லாறு பொதுவிளையாட்டு மைதானம் மற்றும் கோட்டைக்கல்லாறு கிராமத்தின் நீரேந்தும் பகுதிகளை அண்டிய பிரதேசங்கள் என்பன பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களின் பங்களிப்புடன் சுத்தம் செய்யப்பட்டது.

பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வானது கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர், களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் களுதாவளை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்கேற்றப்புடன் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் விவசாயிகளிடம் கள்ளத் தராசு மூலம் மோசடி

## 8 வியாபாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மட்டக்களப்பில் விவசாயிகளிடம் சட்டவிரோத கள்ள தராசின் மூலம் நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளை அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் தேடி முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையில் சட்டவிரோத தராசின் மூலம் மோசடியாக நெல் கொள்வனவு செய்துவந்த 8 வியாபாரிகளின் தராசில்களை கைப்பற்றியதுடன் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அளவீட்டு திணைக்கள அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் தற்போது வேளாண்மை அறுவடை இடம் பெற்றுவரும் நிலையில் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்துவரும் வெளி மாவட்ட வியாபாரிகள் தராசில் மோசடி செய்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்துவருவதாக விவசாயிகள் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி முரளிதரனின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் வயல் பகுதிகளில் நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளின் தராசை பரிசோதனை செய்யமாறு அரசாங்க அதிபர் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பித்தார். இதனையடுத்து சம்பவதினம் செங்கலடி பிரதேசத்திலுள்ள வயல் பகுதிகளில் லொறிகளில் நெல் கொள்வனவு செய்துவரும் வியாபாரிகளை தேடி முற்றுகையிட்டு அவர்களின் தராசில்களை பரிசோதனை செய்தனர்.

இதில் அரச அனுமதியற்ற 5 தராசுகளும் அளவையில் மோசடி செய்யப்பட்ட 3 தராசில்கள் உள்ளிட்ட 8 தராசில்களை கைப்பற்றியதுடன் 8 வியாபரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

# பெரியநீலாவணையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

பெரியநீலாவணையில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பெரியநீலாவணை கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியர் வி.கமலதாசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பெரியநீலாவணை சரஸ்வதி வித்தியாலய அதிபர் திருமதி யோகேஸ்வரி இராமநாதன், பிரதி அதிபர் இ.தவராஜ், கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஸ்தாபகர் சுபராஜன், ஆலோசகர் கொலின்ஸ், கல்முனை வடக்கு பிரதேச செயலக நிதி உதவியாளர் கிருபானந்தன், பாண்டிருப்பு மகா வித்தியாலய அதிபர் அருண்குமார், பிரதம முகாமைத்துவ உதவியாளர் ரவீந்திரன் உட்பட சமூக செயற்பாட்டாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இங்கு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டிற்குட்பட்ட 120 மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

# சிறுவர் பூங்கா சிரமதானம்



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட கோட்டைக்கல்லாறு தெற்கு சிறுவர் பூங்கா (11) சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும், பிரதேச இணைப்பாளருமான த. சுதாகரன் தலைமையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதேச கிராமிய குழுக்கள் மற்றும் பொது மக்கள் பங்குபற்றுதலுடன் சிறுவர் பூங்கா மற்றும் அதனை அண்டிய வீதிகள் முழுமையாக துப்புரவு செய்யப்பட்டன. இப் பணியில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# ஈரநிலங்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



உலக ஈரநில தினத்தையொட்டி பெத்தகனா ஈரநிலங்கள் திட்டத்தின் முதல் விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த ஈரநில விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் சிலோன் தேயிலை நிறுவனத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், சிறுவர்கள் மற்றும் ஒட்டுமொத்த இயற்கை ஆர்வலர்கள் என மூன்று தரப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சுமார் 25 ஹெக்டேயர் பரப்புள்ள இந்த ஈரநிலம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றுச் சூழல் மற்றும் நிலப்பரப்பு ஆகியன உலக வங்கியின் நிதியுதவியுடன் இயற்கையான இந்தச் சூழலை பாதுகாக்கின்றன. இந்நிகழ்வில் சொத்து மற்றும் காணி அபிவிருத்திக்கான பிரதி பணிப்பாளர் நாயகம் ஈ.ஏ.சி.பிரியசாந்த, நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்று சூழலும் நிலப்பரப்பிற்கும் பொறுப்பான பணிப்பாளர் திருமதி சந்தனா கலுபஹன உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# மருதமுனை அல்–மனார் கல்லூரிக்கு நிழற்பிரதி இயந்திரம் அன்பளிப்பு

**அம்பாறை நிருபர்**

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி விஞ்ஞானப் பிரிவில் நீண்டகாலமாக நிலவி வந்த மாணவர்களுக்கான நிழற்பிரதி இயந்திரத்திற்கான தேவை ஓய்வுபெற்ற ஆசிரியர் ஏ.சி. நூர் முஹம்மட் அவர்களினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவரால் நிழற்பிரதி இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் ஐ. உபைதுல்லா கேட்டுக் கொண்டதற்கிணங்க விஞ்ஞானப் பிரிவின் பகுதித் தலைவர் ஆசிரியை இஸட்.எம். ஷரீனா அபூபக்கர் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்த உதவி வழங்கப்பட்டது. நீண்டகால குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டமைக்காக பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு மற்றும் பாடசாலை சமூகம் தமது நன்றியைத் தெரிவித்துள்ளது.

# புதிய காத்தான்குடி குடும்பமொன்றுக்கு இராணுவத்தினரால் வீடு அன்பளிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

இலங்கை இராணுவத்தினால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்துக்கு வீடு ஒன்றை நிர்மாணித்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவின் புதிய காத்தான்குடி வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீடொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி 243 படைப் பிரிவின் ஏற்பாட்டில் இந்த வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மட்டக்களப்பு கல்லடி 243 படைப் பிரிவின் பிரிகேடியர் சந்திம குமாரசிங்க கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ். எம். ஜாபீர், காத்தான்குடி நகரசபை முன்னாள் பிரதி தவிசாளர் எம்.ஐ.எம்.ஜெசீம், காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் கே. எல்.எம்.பரீட், சமூக செயற்பாட்டாளர் கே.எல்.எம்.கலீல் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



இதன் போது வீட்டுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன் விஷேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. எம் ஐ.எம்.மஸாகிறா என்பவரின் பயனாளிக் குடும்பத்துக்கு இந்த வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது. 45 இலட்சம் ரூபா செலவில் இலங்கை இராணுவத்தின் முழு உதவியுடனும் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் சித்திரைப் புதுவருடத்துக்கு முன்னர் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பயனாளியிடம் வீடு கையளிக்கப்படவுள்ளது.

# மலையக லயன் அறைகள், சமயவழிபாட்டு தலங்களுக்கு இலவச சூரியசக்தி மின்சாரம்

## இந்திய 'சோலாபவர்' கம்பனி உதவியுடன் 'சர்மாசோலாஸ்' தொண்டு நிறுவனம் திட்டம்





மலையகத்தில் உள்ள லயன் அறைகள் மற்றும் சமய வழிபாட்டுத் தலங்களுக்கு இலவசமாக சூரியசக்தி மின்சாரத்தை வழங்க திட்டமிட்டுள்ளதாக பண்டாரவளை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் பிரதமகுரு பாண்டவ ஜோதிட அதிபதி கலாநிதி சிவஸ்ரீ சர்மா சுவாமி தெரிவித்தார்.

பண்டாரவளை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:

இந்தியாவின் பிரபல சோலா பவர் நிறுவனம் ஒன்றின் பூரண அனுசரணையுடன் எமது தொண்டு நிறுவனமான 'சர்மாசோலாஸ்' நிறுவனத்தினூடாக மலையகத்தில் உள்ள பாடசாலைகள், லயன் அறைகள் மற்றும் சமயம் சார்ந்த நிறுவனங்கள், பள்ளிவாசல்கள், பன்சலைகள், பிரிவெனாக்கள், இந்துக்கோயில் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு இலவசமாக சர்மாஸ் சோலா பவர் மின்சாரத்தை வழங்க திட்டமிட்டுள்ளோம்.

இவை இலவசமாகவே வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சூரியசக்தி மின்சாரத்திட்டத்தைத் தொடர்ந்து மலையகத்தில் கல்வியில் பாரியதொரு மாற்றத்தினை ஏற்படுத்தும் வகையில் பல வேலைத்திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளோம். மலையகத்தில் மின்சாரக்கட்டணம் செலுத்த முடியாமல் அவதியுறும் வறிய மக்களுக்கு சூரியசக்தி மின்சாரம் வரப்பிரசாதமாக அமையும்.

சர்மாஸ் தன்னியக்க 'சோலாப்பவர்' சூரியசக்தி மின்சார உற்பத்தியின் மூலம் மக்களின் வீடுகளுக்கு மாத்திரமன்றி சமய வழிபாட்டுத் தலங்களுக்கும் உதவி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளேன். இதனைத் தொடர்ந்து நாட்டின் ஏனைய கிராமங்களுக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க எண்ணியுள்ளோம். இந்திய சோலாபவர் நிறுவனம் ஒன்றின் துணையோடு தொண்டு நிறுவனமான சர்மாஸ் மேற்படி இலவச சோலாபவர் சூரிய சக்தி திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது. எதிர்காலத்தில் நாட்டின் சகல பாகங்களுக்கும் இவ்வாறான சோலாப்பவர் சூரிய சக்தி இலவச சேவை திட்டத்தை அறிமுகம் செய்ய உள்ளோம்.

மேலதிக தகவல்களுக்கு வாட்சப் இலக்கம் 0775584501 ஊடாக பதிவு செய்ய முடியும். அல்லது பண்டாரவளை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ள முடியும்".

இவ்வாறு பண்டாரவளை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் பிரதமகுரு பாண்டவ ஜோதிட அதிபதி கலாநிதி சிவஸ்ரீ சர்மா சுவாமி கேட்டுக் கொண்டார்.

தேசமான்ய எம்.ஏ.எம்.ஹசனார்




# நுவரெலியா சீத்தா எளிய ஆலய பாலஸ்தான நிகழ்வு



நுவரெலியா சீத்தா எளிய வனத்தில் அருளாட்சி புரியும் சீதையம்மன் ஆலயத்தில் எதிர் வரும் மே மாதம் 19.05.2024 வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது. மஹாகும்பாபிஷேக பெருவிழாவினை யொட்டி பாலஸ்தான விசேட பூசை நிகழ்வு ஞாயிற்று கிழமை (11.02.2024) காலை இடம்பெற்றது. இதன் போது யாகபூசை இடம்பெற்று பின் பாலஸ்தானம் செய்யப்பட்ட தெய்வங்களுக்கு விசேட அபிசேகங்களை ஆலய பிரதம குருக்கள் தலைமையில் நடத்தி வைத்தார். இதனையடுத்து இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு மகேஸ்வர பூஜையுடன் பகல் அன்ன தானம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த பாலஸ்தான நிகழ்வில் சீதையம்மன் ஆலய நிர்வாக தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த பக்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நீராடச் சென்றவர் நீரில் மூழ்கி மாயம்

மகாவலி கங்கைக்கு நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி காணாமற்போன சம்பவம் ஒன்று கண்டி தலாதத்துஓயா பிரதேசத்தில் (10) இடம் பெற்றுள்ளது. தலாத்து ஓயா ஹாரகம பிரதேசத்தில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தலாத்துஓயா பொலிஸார் தெரிவித்தனர். கண்டி குருதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது இளைஞர் ஒருவரே இவ்வாறு காணாமற்போயுள்ளனர். பொலிஸாரும் பொதுமக்களும் காணமற்போனவரைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# சப்ரகமுவ பல்கலைக்கழக மோதலில் மூவர் வைத்தியசாலையில் அனுமதி

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் மூவர் மோதல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று இரவு இடம் பெற்றுள்ளது. இந்த தாக்குதலினால் இரண்டு மாணவர்களும் ஒரு மாணவியும் தாக்குதலுக்கு இலக்காகி பம்பஹின்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மாணவர்கள் இருவரும் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய பிரிவில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் வெளியில் இருந்து உணவைக் கொண்டு வந்து சிற்றுண்டிச்சாலையில் உட்கொண்ட போது சப்ரகமுவ பல்கலைக்கழக மூத்த மாணவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதல் நடத்திய மாணவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி தமிழ்ச் சங்கத்தின் பரிசளிப்பு விழா

**(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)**

கண்டி தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில்"மலையக மக்களின் இரு நூறு வருட வாழ்வியலும் கண்டி இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயத்தின் நூற்றாண்டு நிறைவும்" என்ற தலைப்பின் கீழ் நடாத்தப்பட்ட கட்டுரை மற்றும் சித்திரப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கண்டி பிரதான தபால் நிலைய கேட்போர்கூடத்தில் சங்கத்தின் தலைவர் டாக்டர் தி. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

விழாவில், பிரதம அதிதியாக பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நவரட்ணராஜா Ph.D கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.

# வடக்கின் உதயம்

## முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பிஜயா கலாமணி காலமானார்

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

வடமராட்சி பிரதேச கல்வி புலமையாளர்களில் ஒருவரான யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பிஜயா கலாமணி தனது 72 ஆவது வயதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை(10) அதிகாலை காலமானார். அல்வாய் தெற்கைச் சேர்ந்த அன்னார் ஆரம்ப கல்வியை வதிரி தேவரையாளி இந்து கல்லூரியிலும் இடைநிலை கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைப்பட்டதாரியானார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராக இணைந்து கலைப்பீட விரிவுரையாளரானார். மேலும் உயர் கற்கைகளை மேற்கொண்டு கலாநிதி பட்டத்தை பெற்றுக் கொண்ட அவர் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியியல்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளராக நீண்ட காலம் பணியாற்றி இருந்தார்.

கலை இலக்கிய துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காத்தவராயன் உள்ளிட்ட பல இதிகாச புராண நாடகங்களை தயாரித்தும் நடித்தும் மேடையேற்றியுள்ளார். மூன்று பிள்ளைகளின் தந்தையாரான இவரின் ஒரு மகனான பரணிதரன் கடந்த சில ஆண்டுகளாக ஜீவநதி எனும் இலக்கிய மாத சஞ்சிகையினை வெளியிட்டு வருகிறார். கலாமணி அவர்களது தந்தையர் தம்பியஜயா புகழ்பூத்த அண்ணாவியாராவார். கடந்த சில வருடங்களாக உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் திடீரென நேற்று(10) காலை காலமானார் அவரது இறுதிக்கிரியைகள் நேற்று(10) மாலை அவரது இல்லத்தில் இடம்பெற்றது.



வெலிகம அறபா மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் இதே பாடசாலையில் கடமை புரிந்து ஓய்வு பெற்ற முன்னாள் அதிபருமான ஏ.எம்.எம் ஆரிப் தன்னிடம் இருந்த பெறுமதிமிக்க அரிய பல நூல்களை பாடசாலையின் நூலகத்துக்கு அண்மையில் அன்பளிப்பு செய்துள்ளார். இந் நூல்கள் கொண்ட பொதியை கல்லூரி அதிபர் எம்.டி.எம்.முதஹ்ஹரிடம் அவர் கையளிப்பதையும் அருகில் கல்லூரியின் பிரதி அதிபர் எம்.எம்.எம். அதாயிம் மற்றும் நூல் நிலையத்தின் பொறுப்பாளருமான நூலகர் திருமதி நஸ்ரினும் காணப்படுகின்றார்கள். (வெலிகம தினகரன் நிருபர்)

# நெல் உலரவிட்டுக் கொண்டிருந்தவர் மோட்டார் சைக்கிள் மோதி உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் வீதியில் நெல் பரவிக்கொண்டிருத்தவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதி விபத்துக்கு உள்ளானதில், நெல் பரவிக்கொண்டிருந்தவர் உயிரிழந்துள்ளார். கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் மந்திகையை அண்மித்த பகுதியில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலம் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் , மோட்டார் சைக்கிள் ஓட்டி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# சிறுவர் விருத்தி மைய மாணவர்களின் கலை நிகழ்ச்சி







இணுவிலில் உள்ள சிறுவர் விருத்தி மைய மாணவர்களின் கலை நிகழ்ச்சி மற்றும் பட்டமளிப்பு விழா இணுவில் பொது நூலகத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

நிகழ்வானது மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள், காவடி நடனம், கிராமிய நடனம், உள்ளிட்ட பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து பட்டமளிப்பு வைபவம் இடம்பெற்றது. ம.கஜந்தரூபன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஜோன் குயின்ரஸூம், சிறப்பு விருந்தினர்களாக ச.கிருபானந்தன், நா.கிருபாகரனும், கௌரவ விருந்தினர்களாக சி.அழகேசன், க.வீரசக்திரூபனும் கலந்து சிறப்பித்ததுடன், இந்த நிகழ்வில் நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## கனேவல்பொல நிக்கவெவ பிரதேசத்தில்

# புதிய குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தொகுதி திறப்பு

**கெக்கிராவ குறூப் நிருபர்**



மிகிந்தலை தேர்தல் தொகுதிக்குட்பட்ட கனேவல்பொல நிக்கவெவ கிராமத்தில் குவைத் நாட்டின் இஸ்லாமிய கெயார் சொசைட்டி அமைப்பின் நிதியுதவியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திர தொகுதி அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் மற்றும் அல்ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூருல்லாஹ் (நளீமி) ஆகியோரினால் உத்தியோகபூர்வமாக மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

அனுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் அல்ஹிமா அமைப்பின் பணிப்பாளரிடம் விடுத்த வேண்டுகோளின்பேரில் இக்குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 8 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்குடிநீர் சுத்திகரிப்பு இயந்திர தொகுதி மூலம் நிக்கவெவ, கனேவல்பொல, ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 400 இற்கும் அதிகமான குடும்பங்கள் பயன்பெறுமென்பது குறிப்பிடத்தக்கது.

நிக்கவெவ ஜும்மா பள்ளி தலைவர் முஹம்மது சாலியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஹபீப் முஹம்மத், ஓய்வு பெற்ற அதிபர்களான ரசாக், பாருக் மற்றும் ஊர் மக்களென பலரும் கலந்துகொண்டனர்.

# வடுகொடை 'ஸர்கார்' ஏற்பாட்டில் மாணவர்கள் கௌரவிப்பு



பேருவளை, சீனன்கோட்டை வடுகொடை பிரதேசத்தை மையப்படுத்தி 'வடுகொடை ஸர்கார்' நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2022 சாதாரன தரப் பரீட்சை, 2023 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவிகளை கௌரவப்படுத்தி அவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேசத்தின் இமாம் ஜெம்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. பிரதம அதிதிகளாக வருகை தந்த நளீம் ஹாஜியார்மகளிர் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியை முபஷ்ஷிரா ஹஸன், சீனன்கோட்டை ஆரம்பப் பாடசாலை பிரதி அதிபர் முர்ஷிதா ஹஸன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது செயலாளர் முஸ்தாக் ஹஸனிடமிருந்து சான்றிதழ் பெறும் ரிம்ஸான் முஹம்மத் என்ற மாணவனையும் படத்தில் காணலாம்.







பாணந்துறை ஜீலான் மத்திய நவோதய கல்லூரியில் ஆங்கில மன்றத்தின் ஏற்பாட்டில் ஆங்கில தின விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட களுத்துறை மாவட்ட ஆங்கில மொழி பிரதிப் பணிப்பாளர் திருமதி இனோகா வீரசிங்க வரவேற்கப்படுவதையும் கல்லூரி அதிபர் ஏ. எம். ஹலீம் மஜீத் பரிசு வழங்குவதையும் கல்லூரியின் ஆங்கில மொழி ஒருங்கிணைப்பாளர் திருமதி நஸ்மினா நிலாரையும் படங்களில் காணலாம்.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 101 சொகுசு வாகனங்கள் விற்பனைக்கு

KQ-8338 BMW XI 2011 car. அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 010240

### 108 நிஸான் கார் விற்பனைக்கு

191056 Nissan FB13, 1992 car அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0714 542958. 010237

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAA-0493 Bajaj 2012, ABB-1145 Bajaj 2015 threewheel அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0711 210810. 010234

QJ-20 3 2 Bajaj 2007, AAI-8298 Bajaj 2013 three w he el அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 3 தொலைபேசி 0705 999163. 010242

## வேலைவாய்ப்பு

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

வீட்டுப் பணிப்பெண் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 17 முதல் 40. சம்பளம் 25000 மற்றும் உணவு, தங்குமிடம் தரப்படும். தொடர்பு 75/ 1, WA சில்வா மாவத்தை, கொழும்பு 06. அழையுங்கள் 001 25 9 1 169, 0777 452447, 075 5091379. 010123

**வேலையாட்கள் தேவை**

**குபுது ஹோட்டல்**

- Cook Maker (Fried Rice, Kottu உணவுகள் செய்ய தெரிந்தவர்கள்)
- Waiter
- Cleaner

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் , பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

**தொடர்புக்கு - T.P No.: 0779507751 Kuputhu Hotel, Kodikamam**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**

**கேள்வியின் பெயர்:**

**பாதுகாப்புச் சேவைக்கான பெறுகை**

கேள்வி இலக்கம்: LECO/MR/ADM/GEN/SVC/SS/2024

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் மொரட்டுவை கிளை அலுவலக பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வகையில் 2024/2026 வருடங்களுக்கான பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் தகைமைவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. உத்தேச சேவைக் காலம் கேள்வி வழங்கப்படும் நாள் முதல் இரண்டு வருடங்களாகும்.
02. தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் கீழ் விலைகள் கோரப்படுகின்றன.
03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை மொரட்டுவை, இடம, எம்.ஜே.சி. பர்னாந்து மாவத்தை, 21ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மொரட்டுவை கிளை அலுவலகத்தின் நிர்வாக அதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இன்று முதல் 07 நாட்களுக்குள் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையில்) விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. மீளளிக்கப்படாத 2,500.00 கட்டணத்தைச் செலுத்தியதன் பின் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை மொரட்டுவை கிளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் உரிய கொடுப்பனவை மொரட்டுவை கிளை அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
05. விலைமனுக்களை 2024-02-26ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கிளை அலுவலகத்திற்கு நேரில் கொண்டு வந்து கையளித்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. விலைமனுக்கள் 2024-02-26ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கிளை அலுவலகத்தின் பெறுகைக் குழுவினால் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் பிரத்தியேகமாக கலந்துகொள்ளலாம்.
07. விலைமனுக்கள் ஒப்படைக்கப்படும் இறுதி நாள் முதல் 75 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**கிளை அலுவலகம்,**
**Ministry of Agriculture and Plantation Industries**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**விவசாயத்துறையை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

**ISP கொத்தணிகளுக்காக வாழைப்பழம், மாம்பழம் மற்றும் கொய்யாப்பழம் ஆகியவற்றிற்கான பழங்களை மூடும் பைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஐடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை **ISP** கொத்தணிகளுக்காக வாழைப்பழம், மாம்பழம் மற்றும் கொய்யாப்பழம் ஆகியவற்றிற்கான பழங்களை மூடும் பைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் என்ற ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. ISP கொத்தணிகளுக்காக வாழைப்பழம், மாம்பழம் மற்றும் கொய்யாப்பழம் ஆகியவற்றிற்கான பழங்களை மூடும் பைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்..

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | அளவு | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| Supply & Delivery of Fruit covering bags for Cavandish Banana in Moneragala District. | LK-MOA-PMU-396273-GO-RFB | 200,000 எண்ணிக்கைகள் | 240,000.00 | 5,000.00 |
| மாம்பழ ISP கொத்தணிகளுக்காக பழங்களை மூடும் பைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | LK-MOA-PMU-396294-GO-RFB | 6,000,000 எண்ணிக்கைகள் | 1,200,000.00 | 15,000.00 |
| கொய்யாப்பழ ISP கொத்தணிகளுக்காக பழங்களை மூடும் பைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் | LK-MOA-PMU-398169-GO-RFB | 3,000,000 எண்ணிக்கைகள் | 650,000.00 | 12,500.00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2024.02.12 ஆம் திகதியிலிருந்து 2024.03.04 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக விவசாய அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறைமை இருத்தல் வேண்டும்.
6. 2024.03.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 2024.03.04 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கமான **"Supply and Delivery of Fruit covering Bags for Banana, Mango and Guava for ISP Clusters"** என்ற சொற்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேலே குறியீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521**
திகதி: 12.02.2024

Daily News Classifieds, the Housewives' companion

## களனிப் பல்கலைக் கழகம் – இலங்கை

# வெற்றிடங்கள்

2022/2023 கல்வியாண்டிற்காக கீழ்க்காணும் பதவிகளுக்கான 2024.03.02ம் திகதி வரை களனிப் பல்கலைக் கழகம் விண்ணப்பங்களை அழைக்கின்றது.

- தற்காலிக விரிவுரையாளர்

வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ கற்கை வளாகம் ஆங்கில மொழி மற்றும் தொடர்பாடல்

**எவ்வாறு விண்ணப்பிக்கலாம்:**
பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஒன்லைன் ஊடாக மாத்திரம் அழைக்கப்படுகின்றது. தயவு செய்து https://www.kln.ac.lk/Vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்திற்கு விஜயம் செய்து ஒன்லைன் விண்ணப்ப, விண்ணப்பத்தை நிரப்புவதற்கான வழிகாட்டல் மற்றும் தகைமைகள் சம்பளம் மற்றும் சலுகைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**களனிப் பல்கலைக்கழகம்.**
11.02.2024

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

| கேள்விப்பத்திர இல: P/PROC/2023/328 | கேள்விப்பத்திர இல: P/PROC/2023/344 |
|---|---|
| அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 1,250,000 வீசா இரட்டை இடைமுக (Dual Interface) பற்று அட்டைகளை வழங்குதல். | அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட 750,000 மாஸ்டர்கார்ட் இரட்டை இடைமுக (Dual Interface) பற்று அட்டைகளை வழங்குதல். |

அருகாமை தகவற்தொடர்பு (NFC) செயற்படுத்தப்பட்ட இரட்டை இடைமுகை (DI) 1,250,000 வீசா கார்ட் மற்றும் 750,000 மாஸ்டர் கார்ட் பற்று அட்டைகளை இலங்கை வங்கிக்கு வழங்குவதற்கென ஒட்டி முத்திரையிடப்பட்ட ஏலவிலை கூறல்களைக் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு இணங்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

**முக்கிய திகதிகள்:**

| | | |
|---|---|---|
| விலைகூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2024.03.07 அன்று 1500 மணி |
| விலைகூறல் ஆவணங்களை வெளியிடுவதற்கான காலப்பகுதி | : | வேலை நாட்களில் 0900 மணியிலிருந்து 1500 மணி வரை |
| விலைகூறலுக்கான முற்கூட்டிய கூட்டம் | : | 2024.02.22 1100 மணிக்கு 14ஆம் தளம், இலங்கை வங்கி, தலைமை அலுவலகக் கட்டடம் |
| விலைகூறலை மூடும் திகதியும் நேரமும் | : | 2024.03.11 1000 மணி |
| விலைகூறலைத் திறத்தல் | : | விலைகூறல் முடிவடைந்ததும் |

மேலதிக விவரங்களுக்கு, விலைகூறுவோர் www.boc.lk என்ற இலங்கை வங்கியின் வலைத்தளத்தைப் பார்வையிடலாம்.

ஏதேனும் அல்லது அனைத்து விலைகூறல்களையும் நிராகரிப்பதற்கான உரிமையையும் எவ்வித காரணமும் தெரிவிக்காது விலைகூறலை அல்லது ஏதேனும் ஒரு பாகத்தினை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் இலங்கை வங்கி கொண்டுள்ளது.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி
"BOC சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 094 112204262, 094 112544310, 094 11 2434786
மின்னஞ்சல்: procofficer1@boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

# திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**135,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 பெப்ரவரி 14ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124E173 | LKA18224H165 | LKA36425B144 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 45,000 | 60,000 | 135,000 |

| | | |
|---|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : | 2024 பெப்ரவரி 14 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2024 பெப்ரவரி 16 |
| வழங்கப்படும் திகதி | : | 2024 பெப்ரவரி 16 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2024 பெப்ரவரி 14 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீட்டொன்றின் குறைந்த பட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**டபிள்யூ.எல்.எஸ். ஜயசுந்தர**
**பதில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# கேள்வி அறிவித்தல்

## பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் கேள்வி கோரல்

### வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து அதிகார சபை – வடமேல் மாகாணம்

வடமேல் மாகாண வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகார எல்லைக்குள் இங்கு கீழே தரப்பட்டுள்ள வீதிகளில் வீதிகளுக்கிடையில் பயணிகள் போக்குவரத்து செய்யும் முகமாக வடமேல் மாகாணத்திற்குள் நிரந்தர பதிவுடையவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் விபரப் பத்திரங்களை 2024.03.01ம் திகதிக்கு முன்னர் இவ் அதிகார சபையின் தலைமையகத்தில் அல்லது குளியாப்பிட்டிய புத்தளம் வலய அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் ஒவ்வொரு வீதிக்கும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை சம்பந்தமான விபரப் பத்திரத்தை குறித்த கேள்வி விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும் போது விண்ணப்பப்படிவக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 1500.00 தொகை அறவிடப்படும். ஏனைய நிபந்தனைகள் சகலதும் கேள்வி விண்ணப்பத்துடன் விநியோகிக்கப்படும் விபரப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கேள்வி விண்ணப்பங்களை 2024.03.01 பி.ப. 4.15 இற்கு முன் இவ் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட வேண்டியதுடன் அவ்வாறு ஏற்கப்படும் கேள்வி விண்ணப்பங்கள் 20-24.03.04 மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்கள் பற்றிய இறுதித் தீர்மானம் கேள்விச் சபைக்கு உரியது. தபாலில் அனுப்பப்படும் சகல கேள்வி விண்ணப்பங்களும் பொது முகாமையாளர், வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, நீர்கொழும்பு வீதி, 'ஹால்பார' சந்தி, போயகனே என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வீதியைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தொடர்புகள்: 037-2229819, 037-2229820**

**தலைவர்,**
**வீதிகளுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்து அதிகார சபை (வடமேல்),**
**நீர்கொழும்பு வீதி, 'ஹால்பார' சந்தி, போயகனே.**

| தொ. இல. | வீதி | வீதியின் வகை | வெற்றிட எண்ணிக்கை | குறைந்த பட்ச கேள்வித் தெகை |
|---|---|---|---|---|
| 1 | நாத்தாண்டிய - பெரகும்புர (குளியாப்பிட்டிய, நிகவெரட்டிய, தலதாகம ஊடாக) | A | 1 | 100,000.00 |
| 2 | புத்தளம் - நிக்கவெரட்டிய (கீரியங்கல்லிய, ரஸ்நாயக்கபுர ஊடாக) | B | 1 | 750,000.00 |
| 3 | மடகல்ல - மஹவ | B | 1 | 750,000.00 |
| 4 | கிவுல - புத்தளம் (9 பவும ஊடாக) | B | 1 | 750,000.00 |
| 5 | தபகொல்ல - பொல்கஹவெல (ஹொதெல்ல ஊடாக) | B | 1 | 750,000.00 |
| 6 | நாரம்மல - ஹெட்டிபொல (ஹொரொம்பாவ மாவீஎல ஊடாக) | B | 2 | 750,000.00 |
| 7 | ஹெட்டிபொல - நாரம்மல (மாவீஎல, ஹொரெம்பாவ ஊடாக) | B | 2 | 750,000.00 |
| 8 | போவத்த - நாத்தாண்டிய (விலத்தவ, மாதம்பே பழைய நகரம் ஊடாக) | B | 1 | 750,000.00 |
| 9 | நாத்தாண்டிய - போவத்த (மாதம்பே பழைய நகரம், விலத்துவ ஊடாக) | B | 1 | 750,000.00 |

| தொ. இல. | வீதி | வீதியின் வகை | வெற்றிட எண்ணிக்கை | குறைந்த பட்ச கேள்வித் தெகை |
|---|---|---|---|---|
| 10 | மைலங்குளம் - புத்தளம் (8ம் மைல்கல் ஊடாக) | C | 1 | 500,000.00 |
| 11 | கொத்தன் தீவு - புத்தளம் (கரம்ப ஊடாக | C | 1 | 500,000.00 |
| 12 | வெலிபென்னகஹமுல சந்தி - குளியாப்பிட்டி (தன்டகமுவ, அலதுபாவ ஊடாக | C | 1 | 500,000.00 |
| 13 | ஆனமடுவ - ஆடிகம (மஹகும்பு கடவல 10ம் மைல் கல் ஊடாக) | C | 1 | 500,000.00 |
| 14 | ஹெட்டுவாவ - மஹவ (இஹலகம, வாகொல்ல ஊடாக) | C | 1 | 500,000.00 |
| 15 | ரெகவுல - ஹிரிபிட்டிய (தலாகொலவெவ, பொல்பிதிகம, கல்டெவ்வெவ, கலுகல்ல ஊடாவ) | C | 1 | 500,0000.00 |
| 16 | சிலாபம் - மாரவில (அம்பகந்தவில, தொடுவாவ, குடுசபள்ளிய) | C | 1 | 500,000.00 |
| 17 | மாரவில - சிலாபம் (குருச பள்ளிய, தொடுவாவ அம்பகந்தவில) | C | 1 | 500,000.00 |
| 18 | மிரிஸ்ஸன்கொட்டுவ - வென்னப்புவ | C | 1 | 500,000.00 |

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

# உள்ளூராட்சி திணைக்களம், ஊவா மாகாணம்

# உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்

1. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக உலக வங்கியிலிருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள வேலைகளின் பணக்கொடுப்பனவுகளுக்கு செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உரித்தான உள்ளூர் அதிகாரசபைகளின் (ஊவா மாகாணம்) சார்பாக உள்ளூராட்சி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
3. இவ்விலைமனுவானது 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் 03 ஆம் இலக்க சட்டத்தின்' ஏற்பாடுகளினால் நிருவகிக்கப்படுகின்றது. எனவே, மொத்த பெறுமதியானது ஐந்து மில்லியன் இலங்கை ரூபாவிற்கு (5,000,000 இ.ரூபா) மேற்பட்டால் மாத்திரமே மேற்கூறப்பட்டுள்ள சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையின் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுச் சான்றிதழ் (படிவம் பிசிஏ 03) ஐ விலைமனுதாரர் விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk)
4. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
5. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தரம் மற்றும் விஷேடத்துவத்திற்காக பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் 04 ஆம் பிரிவின் தகைமைத் தகவல் மற்றும் அட்டவணைகள் (விலைமனுக்கோரல் தரவு/ ஒப்பந்த தரவு) ஆகியன விலைமனுக்கோரல் ஆவணத்தின் 5 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ளன.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள உரித்தான உள்ளூர் அதிகாரசபைகளின் ஆணையாளர் / செயலாளரிடமிருந்து வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
8. 2024.02.12 ஆம் திகதியிலிருந்து 2024.03.03 ஆம் திகதியன்று வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 7,500 ரூபாவை மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் செலுத்திய பின்னர் உள்ளூராட்சி திணைக்கள- ஊவா அல்லது உரித்தான உள்ளூர் அதிகாரசபைகளுக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
9. 2024.03.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதுளை, மார்ட்டின் சில்வா மாவத்தை, உள்ளூராட்சி திணைக்களத்திடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
10. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்கள் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. 2024.02.21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பதுளை, மார்ட்டின் சில்வா மாவத்தை, உள்ளூராட்சி திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே இக்கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| உள்ளூர் அதிகாரசபையின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | வேலைகளின் விளக்கம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு (இ.ரூபா - மில்லியனில்) | ஒப்பந்தக் காலம் | தேவைப்படும் தரம் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | விலைமனு செல்லுபடியாகும் காலம் | விலைமனு ஆவணம் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஹல்துமுல்ல பிரதேச சபை | LDSP/UP/BD/HMPS/W/2024/1 | நிக்கபொத்த பலநோக்கு கட்டிட மேம்படுத்தல் | 14.1 | 180 நாட்கள் | சி7, சி6 மற்றும் சி5 – கட்டிடம் | 141,000.00 | 27.05.2024 | உள்ளூராட்சி திணைக்களம் - ஊவா – மார்ட்டின் சில்வா மாவத்தை,பதுளை. 0552222407. அல்லது உரித்தான உள்ளூராட்சி அதிகாரசபைகள். |
| ஹல்துமுல்ல பிரதேச சபை | LDSP/UP/BD/HMPS/W/2024/2 | கொஸ்லந்த பொருளாதார நிலைய மேம்படுத்தல் | 7.88 | 180 நாட்கள் | சி-8, சி-7 மற்றும் சி-6 - கட்டிடம் | 79,000.00 | 27.05.2024 | |
| லுனுகல பிரதேச சபை | LDSP/UP/BD/LPS/W/2024/1 | மடுல்சீம நகரில் தற்போதுள்ள பலநோக்கு கட்டிட மேம்படுத்தல் | 8.0 | 180 நாட்கள் | சி-8, சி-7 மற்றும் சி-6 - கட்டிடம் | 80,000.00 | 27.05.2024 | |
| சொரந்தொட்ட பிரதேச சபை | LDP/UP/BD/SOPS/W/2024/1 | ரிதிபான பலநோக்கு கட்டிட அபிவிருத்தி | 2.83 | 90 நாட்கள் | சி9, சி8 மற்றும் சி7 – கட்டிடம் | 28,500.00 | 13.05.2024 | |
| நகரசபை ஹப்புத்தளை | LDSP/UP/BD/UCH/W/2024/1 | ஹப்புத்தளையிலுள்ள சிறுவர் பூங்காவை அபிவிருத்தி செய்தல் | 2.11 | 90 நாட்கள் | சி9, சி8 மற்றும் சி7 – கட்டிடம் | 21,500.00 | 13.05.2024 | |
| எல்ல பிரதேச சபை | LDSP/UP/BD/EPS/W/2024/1 | ஹேல ஹல்பே பழைய பிரதேச சபை கட்டிடத்தை புதுப்பித்தல் | 7.9 | 180 நாட்கள் | சி-8, சி-7 மற்றும் சி-6 – கட்டிடம் | 79,500.00 | 27.05.2024 | |

**செயற்றிட்ட உதவிப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,**
**உள்ளூராட்சி திணைக்களம்,**
**ஊவா மாகாணம்,**

**055-2222407**
**12.02.2024**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

## 1964 இலக்க 28ஐக் கொண்ட காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் 7(1)ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம் KDS/HAR/4/2/1/51
சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பிலக்கம் 4-3/9/2017/WS/589

இங்கு கீழ் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2299/10 மற்றும் 2022.09.27ஆம் திகதி இலக்கம் 2332/42 மற்றும் 2023.05.19ஆம் திகதி மற்றும் இலக்கம் 2363/88 மற்றும் 2023.12.23ஆம் திகதி கொண்ட இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையிகளைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| பிரதேச செயலாளர் பிரிவு | : ஹாரிஸ்பத்துவ |
| கிராமம் | : ருவன்புர |
| அமைவிடம் | : மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் குழுகம்மன சியபத்துவ சிறு பிரிவில் ருவன்புர கிராமம் |
| காணியின் பெயர் | : - |
| அடிப்படை வரைபட இலக்கம் | : மஹ 7145 |
| காணித் துண்டு இலக்கம் | : 1,2,3,4 |

**மொஹான் தர்மதாச**
**பிரதேச செயலாளர்**
**ஹாரிஸ்பத்துவ.**

2024 பெப்ரவரி மாதம் 05ஆம் திகதி

**பிரதேச செயலாளர் காரியாலயம்**
**ஹாரிஸ்பத்துவ,**
**நுகவெல.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## ஏலவிற்பனை அறிவித்தல்

### அகற்றப்படாத கப்பற்சரக்கின் விற்பனை

**ஏலவிற்பனை இல.: 2024-01-(SP)**
**ஏலவிற்பனைத் திகதி: 2024.02.21**

கொழும்புத் துறைமுகத்திலுள்ள களஞ்சியசாலைகள் மற்றும் திறந்தவெளிகளிலுள்ள பின்வரும் கப்பற்சரக்கை கொள்வனவு செய்து மற்றும் அகற்றுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன.

**ஏலவிற்பனை இல.: 2024-01(sp)**

| | |
|---|---|
| Motor Cycles | Electric Three Wheeler |
| Electric Bicycle | Refined Sale |
| Canola Oil | Fish Oil, Multi Vitamin, Hair Skin & Nails etc., |
| Chocolate | Toughened Glass |
| Lead Acid Tubular Battery | Flexibag Aquawax |
| Virgin pc Granule Bayer 2407 | Motor Spare Parts |
| Electric Motor parts | Fan products |
| Raw material for Ceramic Industry | Fabric |
| Rich Farm Booster | PVC Roll |
| Wall Putty | Other Merchandise etc., |

2024.02.12 ஆம் திகதியன்று மு.ப. 10 மணியிலிருந்து 2024.02.20 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவையும் (அத்துடன் பெசேவ மற்றும் SSCL) ஆகியவற்றையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி, 15 ஆம் இலக்கத்திலுள்ள கெனல் யார்ட், One-Stop ஆவணவாக்கல் நிலையத்தில் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை லொஜிஸ்டிக்ஸ் பிரிவு, விற்பனை பிரிவு அலுவலகத்திலிருந்து ஏலவிற்பனை பட்டியல்களை பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு **www.slpa.lk** என்ற இணையத்தை பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்),**
12.02.2024
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

### உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம் – செயற்றிட்டம் ID P 163305

### திருகோணமலை, கிழக்கு மாகாணம்,

1. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்ட ஆகுசெலவிற்காக உலக வங்கியிலிருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள வேலைகளின் பணக்கொடுப்பனவுகளுக்கு செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உரித்தான உள்ளூர் அதிகாரசபைகளின் சார்பாக உள்ளூராட்சி அதிகாரசபையின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. விலைமனுக்கோரல் ஆவணத்தின் III ஆம் பிரிவில் தகைமைத் தேவைப்படுத்தல்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் தரவுத் தாளில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள உரித்தான உள்ளூர் அதிகாரசபைகளின் செயலாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பரீட்சிக்கலாம்.
6. 2024.02.12 ஆம் திகதியிலிருந்து 2024.03.04 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் உரித்தான உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2024.03.05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுப் பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது அவற்றின் ஒப்படைத்தலுக்கான எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு கொள்வனவுக்காரர் பொறுப்பேற்க மாட்டார்.
10. ஒப்பந்தத்தை வழங்குவதில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**செயற்றிட்ட உதவிப் பணிப்பாளர்,**
**உள்ளூராட்சி அபிவிருத்தி ஆதரவு செயற்றிட்டம்,**
**திருகோணமலை மாவட்டம்.**

12.02.2024

| தொ. இல. | பொருட்களின் விளக்கம் மற்றும் விலைமனு இல. | பெறுகை அமைப்பின் பெயர் | விலைமனுக் கோரல் ஆவணத்தை கொள்வனவு செய்யுமிடம் மற்றும் தொலைபேசி இல. | விலைமனுக்களை ஒப்படைக்கும் இடம் மற்றும் விலைமனுக்கள் திறக்கப்படவுள்ள இடம் | விலைமனு ஆவணத்தின் விலை (ரூபாவில்) | தேவைப்படும் விலைமனுப்பிணை | | விலைமனு செல்லுபடியாகும் காலப்பகுதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | விலைமனு பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலப்பகுதி | |
| 01. | ஐஸ் கிறீம் உற்பத்தி செய்யும் பொறித் தொகுதியை வழங்கல் மற்றும் நிறுவுதல் - புகாரி நகரில் யோகட் மற்றும் தயிர் skid பொறித்தொகுதியின் மீதி வேலை. EP/TR/THPS/LDSP/ PT3/2024/G/01 | பிரதேச சபை தம்பலகாமம் | பிரதேச சபை தம்பலகாமம் 026-2246055 | பிரதேச சபை தம்பலகாமம் | 4,000.00 | 98,000.00 | 2024.06.18ஆம் திகதி வரையும் | 2024.05.21ஆம் திகதி வரையும் |
| 02. | மெரி கொ ரவுண்ட் ஐ வழங்கல் மற்றும் நிறுவுதல் - குளக்கோட்டான் சிறுவர் பூங்காவில் மீதி வெளியக விளையாட்டு உபகரணத்தை நிறுவுதல் ET/TR/TRUC/LDSP/ PT3/2024/G/01 | நகர சபை திருகோணமலை | நகர சபை திருகோணமலை 026-2222275 | நகர சபை திருகோணமலை | 3,000.00 | 70,000.00 | 2024.06.18ஆம் திகதி வரையும் | 2024.05.21ஆம் திகதி வரையும் |
| 03. | மின்சார ரயில் பாதையை வழங்கல் மற்றும் நிறுவுதல் - கச்சகொடிதீவு சிறுவர் பூங்காவில் வசதிகளை மேம்படுத்தல் - EP/TR/KIPS/LDSP/ PT3/2024/G/01 | பிரதேச சபை கிண்ணியா | பிரதேச சபை கிண்ணியா 026-2236147 | பிரதேச சபை கிண்ணியா | 2,500.00 | 50,000 | 2024.06.18ஆம் திகதி வரையும் | 2024.05.21ஆம் திகதி வரையும் |
| 04. | ட்ரக்டரை வழங்கல் - மூதூர் பிரதேச சபையின் திண்ம கழிவு முகாமைத்துவ முறை மற்றும் பொதுச் சேவையை மேம்படுத்தல். EP/TR/MUPS/LDSP /BT4/2024/G/01 | பிரதேச சபை,மூதூர் | பிரதேச சபை, மூதூர் - 026-2238376/026-2238573 | பிரதேச சபை, மூதூர் | 2,500.00 | 48,000.00 | 2024.06.04ஆம் திகதி வரையும் | 2024.05.07ஆம் திகதியன்று வரையும் |
| 05. | உயரம் குறைந்த ட்ரெயிலர் - மூதூர் பிரதேச சபையின் திண்ம கழிவு முகாமைத்துவ முறை மற்றும் பொதுச் சேவையை மேம்படுத்தல். EP/TR/MUPS/LDSP /BT4/2024/G/02 | பிரதேச சபை, மூதூர் | பிரதேச சபை, மூதூர் - 026-2238376/026-2238573 | பிரதேச சபை, மூதூர் | 1,500.00 | 22,000.00 | 2024.06.04ஆம் திகதி வரையும் | 2024.05.07ஆம் திகதியன்று வரையும் |
| 06. | மின்சார ரயில் பாதையை வழங்கல் மற்றும் நிறுவுதல் - கந்தளாய் நகரில் சிறுவர் -பூங்காவின் புதுப்பித்தல் EP/TR/KTPS/LDSP/ PT4/2024/G/01 | பிரதேச சபை கந்தளாய் | பிரதேச சபை கந்தளாய் - 026-2234275 | பிரதேச சபை கந்தளாய் | 2,500.00 | 50,000.00 | 2024.06.18ஆம் திகதி வரையும் | 2024.05.21ஆம் திகதி வரையும் |

**செயற்றிட்ட உதவிப் பணிப்பாளர்,**
**உள்ளூராட்சி ஆதரவு செயற்றிட்டம்,**
**திருகோணமலை மாவட்டம்,**

12.02.2024

## திஹகொட பிரதேச சபை

## 252-6509 Mitsubishi L200 4WD Double Cab
## வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கான விலைமனுக் கோரல் பற்றியது

திஹகொட பிரதேச சபையில் பாவிக்கப்பட்ட 252-6509 Mitsubishi L200 4WD double cab வாகனத்தை மிகவும் துரிதமாக பழுதுபார்க்க வேண்டி உள்ளது. அதற்காக கீழ்க்காணும் மாதிரிகளுக்கு அமைவாக தகைமையுள்ள நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **Complete body** | | | | |
| 1 | Complete Mitsubishi L200 or STRADA double cabin & rear loading body in good condition including the following components. Front and rear windshields, Bonnet, Complete 4 doors with locks and window glasses, Rear body gate, Rear windshield guard, Front and rear buffers, Side mirrors, All the lamps (main head lamps, side turn lamps, brake lamps, parking lamps, reverse lamps, number plate lamps, cabin interior lamp, etc.), Complete dashboard with meters, indicators, and switches. All cabin interior upholstery, Cabin carpet, Complete steering column with switch set and steering wheel, Wiper motor, Wiper links, Wiper arms, Wiper blades, Windshield washer motor, Clutch master pump, Clutch pedal, Brake master pump, Brake booster (servo) unit, Brake pedal, Accelerator pedal, Gear shift and 4WD lever with dust boots, Handbrake lever, Front and rear number plates, Horn set, column switch set, Starter switch, Bonnet hood insulator, Mud flaps for the mud guards, Seat belts, Door speakers or dashboard speakers (at least 2), blower motor, sun visors, Antenna (windshield or external). Complete wiring harness of the vehicle with connectors, relays, fuse boxes, fuses, and flexible conduit insulation. Adjustable front seats (separate type) with head restraints, Bench type rear seat with 2 head restraints (Seats should have undamaged cushion and seat covers).<br>> Supplied body should be in the registered colour of the vehicle. The paint and surface finish should be of acceptable good quality (free from corrosion and paint defects). | RC | Complete set | | |
| | **Body repairs** | | | | |
| 2 | Weld and repair corroded chassis, cross-members and brackets | ML | | | |
| 3. | Spray-paint the entire undercarriage, complete vehicle chassis frame, cross members, support bars and brackets with two component marine epoxy paint prior to fitting the vehicle body. | ML | | | |
| 4 | Labour charges for removing the old cabin and fitting the new complete cabin body with components. | ML | | | |
| 5 | Remove all tyres and paint wheel rims. | ML | 5 | | |
| 6 | Refit tyres and carr yout wheel balancing | ML | 5 | | |
| 7 | Weld and repair the corroded places of the exhaust pipe and silencer barrel | ML | | | |
| | Spare parts for the body | | | | |
| 8. | Body rubber mounts and strip mounts set with bolts, nuts and washers. | MR | 1 | | |
| 9. | Cabin foot carpet (bucket carpets) set | MR | 1 set | | |
| 10. | Supply and fit a FM radio + audio player capable of playing media files form USB drive and SD cards. Brand.......................................<br>Model code ..........................................<br>Country of manufacture ..............................<br>Warranty ........................................... | Generic or Branded | 1 | | |
| 11. | Manufacture 3-part foldable stainless steel frame for the rear body cover with 12mm (or thicker) stainless steel tubes. Manufacture a cover with rubber coated canvas material and fit to the foldable frame. Fit a keyed lock for the rear body cover. Provide two keys for the lock. | LN | 1 | | |
| 12 | Number plates | LN | 2 | | |
| 13. | Suitable rear buffer made of stainless-steel sheet | LN | 1 | | |
| | **Spare parts for Mechanical repairs** | | | | |
| 14. | Steering box seal kit | NG/GP | 1 | | |
| 15. | Rocker shaft Timing belt | NG/GP | 1 | | |
| 16. | Balance shaft Timing belt | NG GP | 1 | | |
| 17. | Timing belt adjuster | NG/GP | 1 | | |
| 18. | Timing belt tensioner | NG/GP | 1 | | |
| 19. | Crank oil seal (front) | NG/GP | 1 | | |
| 20. | Tappet cover packing | NG/GP | 1 | | |
| 21. | Rear brake slave cylinder washers set | MR | 2 | | |
| 22. | Upper arm bushings | MR | 2 | | |
| 23. | Lower arm bushings | MR | 2 | | |
| 24. | Upper arm ball joints | NG | 2 | | |
| 25. | Lower arm ball joints | NG | 2 | | |
| 26. | Spring leaf rubber bushings | MR | 8 | | |
| 27. | Spring leaf silent bushings | MR | 2 | | |
| 28. | Mating gear wheel for the odometer cable | NG/GP | 1 | | |
| 29. | Alternator oil return (rubber) hose and clips | MR | 1 | | |
| 30. | Complete steering oil pump with oil tank | RC/NG | 1 | | |
| 31. | Packing material for manifold-exhaust pipe joint | MR | 1 | | |
| 32 | Spring loaded bolts for manifold- exhaust pipe joint | MR | 2 | | |
| 33. | Carryout Wheel alignment | ML | | | |
| | **Mechanical repairs** | | | | |
| 34. | Labor charges for above part replacements | ML | | | |
| 35. | Repair odometer cable connection to the gear box | ML | | | |
| 36. | Repair parking brake hand lever | ML | | | |
| 37. | Clean radiator core tubes | ML | | | |
| | **Air conditioning** | | | | |
| 38. | Expansion valve | NG | 1 | | |
| 39 | AC dryer filter | MR | 1 | | |
| 40. | Price of refrigerant gas. (Obtain air temperature of 18°C at the dashboard louvers: - i.e. a temperature difference of at least 15°C between the dashboard louvers and the ambient is required). | MR | | | |
| 41. | Labour charges for dismantling, cleaning, fitting the new components and gas charging. | ML | | | |
| | Total | | | | |

**Total bid offer (in words)**

..............................................................................................................................

Waranty period for supplied body and body repairs.............................................................................

Waranty period for mechanical repairs and supplied parts,,,.................................................................

Waranty period for AC repairs and supplied parts...............................................................................

Time required to complcte the above-mentioned repairs.........................................................................

Signature of bidder................................................ Company seal:...........................................................

Date.......................................... Contact numbers...................................................................................

**Legend for specifying the condition of spare parts or work**

LN-Locally manufactured new part
ML-Material and labour
GP-Genuine new part
MR-Items suppplied at market tate
NG-Non genuine new part
RC-Genuine reconditioned part
UP-Genuine used part

**நிபந்தனைகள்:**

1. வழங்கப்படும் சகல உதிரிப்பாகங்கள், பழுதுபார்த்தல் மற்றும் பெயின்ட் செய்வதற்காக ஒரு வருட உத்தரவாத காலம் உத்தேசிக்கப்படுவதுடன் வழங்கப்படும் உத்தரவாத காலம் மேற்படி மாதிரியில் குறிப்பிடப்படல் வேண்டும்.
2. இந்த முழுமையான பழுதுபார்த்தலை நிறைவேற்றி முடிப்பதற்கு வழங்க வேண்டிய காலம் மேற்படி மாதிரியில் குறிப்பிடப்படல் வேண்டும்.
3. வாகனத்தின் பழுதுபார்க்க வேண்டிய பாகங்களை கழற்றிப் பார்த்த பின்பு மேலும் உதிரிப்பாகங்கள் தேவைப்படின் அதற்காக விலைமதிப்பீடு ஒன்றை சமர்ப்பிக்கலாம்.
4. வழங்கப்படும் Bபொடி அந்த வாகன மொடலுடன் சம்பந்தப்பட்ட முழுமையான Bபொடியாக இருப்பதுடன் அதன் நகல் பாகங்களும் நல்ல நிலையில் இருத்தல் வேண்டும். அது அரசில் பதிவு செய்த நிறத்தில் (Silver) இருத்தல் வேண்டும். இல்லையெனில் பதிவு செய்யப்பட்ட நிறத்தில் பெயின்ட் செய்து பொருத்துதல் வேண்டும்.
5. மேற்படி மாதிரிகளில் குறிப்பிடப்படும் மாதிரியைப் பூர்த்தி செய்து செயலாளர், பிரதேச சபை, திஹகொட என்ற முகவரிக்கு அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.
6. 2024.02.12 முதல் 2024.03.04 வரை விலைமனுக்கள் கோரப்படும் விலைமனுக்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '252-6509 - மிட்சுபிஷி L200 4WD double cab வாகனத்தை பழுதுபார்ப்பதற்கான விலைமைனுக்கள்' என்று குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் அவற்றை பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவத்து ஒப்படைக்கலாம். எந்த விலைமனுவையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை திஹகொட பிரதேச சபையின் கேள்வி/ விலைமனுக் கமிட்டிக்கு உரியது. (கேள்விகள் திறத்தல் 2024.03.05 மு.ப. 10.30 இற்கு நடைபெறும்)
7. மேலதிக விபரங்களுக்கு: 041-2245275/041 2245892 தொலைபேசி இலக்கத்தின் மூலம் விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 பெப்ரவரி 12 திங்கட்கிழமை

# துஷ்மன்த சமீரவுக்கு பதில் ஒருநாள் தொடரில் அசித்த

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து உபாதை காரணமாக விலகியுள்ள வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீரவுக்கு பதில் அசித்த பெர்னாண்டோ அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து ஆப்கானிஸ்தானுக்கு எதிரான நேற்றைய (11) இரண்டாவது போட்டியில் அசித்த பெர்னாண்டோ அணியில் இடம்பெற்றார்.




ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள்போட்டியின்போது தனது எட்டாவது ஓவரை வீச வந்த சமீர காலில் அசௌகரியத்தை வெளிப்படுத்தினார். அவர் அப்போது இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தபோதும் தொடர்ந்து பந்து வீச வரவில்லை. இதனையடுத்து அவரது வலது காலில் உபாதை ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.



எனினும் இது அவரது முந்தைய உபாதைகளுடன் தொடர்புபட்டது அல்ல என்பது தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டில் உபாதைகள் மற்றும் கணுக்கால் காயத்திற்காக சத்திர சிகிச்சைக்கு முகம்கொடுத்த அவர் பல போட்டிகளை தவறவிட்டார்.

இந்நிலையில் அவரது தற்போதைய உபாதையின் தீவிரம் உறுதி செய்யப்படவில்லை. முதலாவது ஒருநாள் போட்டிக்குப் பின்னர் 32 வயதான சமீரா ஸ்கேன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அதன் முடிவுகள் இங்கிலாந்தில் உள்ள மருத்துவ நிபுணர் ஒருவரின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

"அவர் தற்போது நான்றாக உணர்கின்ற போதும், மருத்துவ நிபுணரிடம் இருந்து முடிவு கிடைக்கப்பெறும் வரையில் அவரது காயத்தின் சரியான நிலை குறித்து எமக்கு உறுதியாகத் தெரியாதுள்ளது" என்று இலங்கை அணி முகாமையாளர் மஹிந்த ஹலன்கொட தெரிவித்துள்ளார்.

அவருக்கு பதில் அணியில் சேர்க்கப்பட்டிருக்கும் பெர்னாண்டோ கடைசியாக 2022 நவம்பரில் ஒருநாள் சர்வதேச போட்டியில் ஆடியதோடு அதுவும் ஆப்கானிஸ்தானுக்கு எதிராகவாகும். இதுவரை (நேற்றைய போட்டி தவிர்த்து) ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடி இருக்கும் அவர் ஒரே ஒரு விக்கெட்டை வீழ்த்தி இருந்தார்.

எவ்வாறாயினும் டெஸ்ட் கிரிக்கெட்டில் சோபித்து வரும் அசித்த பெர்னாண்டோ ஆப்கானிஸ்தானுக்கு எதிரான அண்மைய போட்டியில் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

## ஆசிய கிண்ணத்தை தக்கவைத்தது கட்டார்




லுஸைலா அரங்கில் நடந்த இறுதிப் போட்டியில் அக்ரம் அபீப் பெனால்டிகள் மூலம் பெற்ற ஹட்ரிக் கோலினால் ஜோர்தானை 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய கட்டார் அணி ஆசிய கிண்ணத்தை வென்றது.

இதன்மூலம் போட்டியை நடத்திய கட்டார் ஐந்தாவது அணியாக அடுத்தடுத்து ஆசிய கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது. 2019 ஆம் ஆண்டிலும் அந்த அணி சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை (10) நடந்த இறுதிப் போட்டியில் அபீபின் பெனால்டி மூலம் கட்டார் முதல் பாதியில் முன்னிலை பெற்ற நிலையில் யாஸான் அல் நெய்மத்தின் கோலினால் ஜோர்தான் பதில் கோல் திருப்பியது. என்றாலும் அபீபி கிடைத்த மேலும் இரு ஸ்பொட் கிக் வாய்ப்புகளை கோலாக திருப்பினார்.

2004 ஆம் ஆண்டு ஜப்பானுக்குப் பின்னர் கட்டார் முதல் அணியாக நடப்புச் சம்பியன் பட்டத்தை தக்கவைத்ததோடு முதல் முறை ஆசிய கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பை ஜோர்தான் இழந்தது.

## பாகிஸ்தானில் ஆட்சி அமைப்பதில் இழுபறி



பாகிஸ்தான் பொதுத் தேர்தலின் வாக்கு எண்ணும் பணிகள் நேற்று (11) முடிவடைந்த நிலையில், சிறை அனுபவித்து வரும் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் ஆதரவு சுயேச்சை வேட்பாளர்கள் பெரும்பான்மையாக 264 ஆசனங்களில் 101 இடங்களை வென்றிருப்பதாக தேர்தல் ஆணையத்தின் இணையதளம் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை தேர்தல் நடைபெற்று 60 மணி நேரத்திற்குப் பின்னரே இறுதி முடிவு வெளியாகியுள்ளது. இந்தத் தாமதம் பெரும் சந்தேகங்களை எழுப்பியுள்ளன.

இதில் மற்றொரு முன்னாள் பிரதமரான நவாஸ் ஷரீபின் கட்சி பாராளுமன்றத்தில் மிகப்பெரிய ஒற்றை கட்சியாக 75 இடங்களை வென்றுள்ளது.

எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை வெல்லாத நிலையில் கூட்டணி அரசொன்றை அமைப்பதற்கு மற்றக் குழுக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பதாக நவாஸ் ஷரீப் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு வரை இறுதி முடிவு வெளியாகாதது தொடர்பில் தேசிய அளவில் அமைதியான ஆர்ப்பாட்டங்களை நடத்தப்போவதாக இம்ரான் கானின் பாகிஸ்தான் தஹ்ரிக்கே இன்சாப் கட்சி எச்சரிதுள்ளது. சிறு சிறு அர்ப்பாட்டங்கள் ஏற்கனவே இடம்பெற்று வருகின்றன. எனினும் சட்ட விரோதமான ஒன்றுகூடல்கள் ஒடுக்கப்படும் என்று பாகிஸ்தான் பொலிஸ் எச்சரித்துள்ளது.

தேர்தல் தினத்தில் கைபேசி இணையதள வசதிகள் முடக்கப்பட்டதால் ஏற்பட்ட தொடர்பாடல் பிரச்சினையே தேர்தல் முடிவு வெளியாவதற்கு தாமதம் ஏற்படக் காரணம் என்று பாகிஸ்தான் இடைக்கால அரசு குறிப்பிட்டுள்ளது. பாதுகாப்பு காரணத்திற்காக இணைய வசதி முடக்கப்பட்டதாக நிர்வாகம் குறிப்பிட்டபோதும் உரிமைக் குழுக்கள் மற்றும் அமெரிக்க உட்பட வெளிநாட்டு அரசுகள் இந்த நடவடிக்கைக்கு கவலையை வெளியிட்டன.

எக்ஸ் சமூகதளத்தில் வெளியிட்ட பதிவில், பாகிஸ்தான் தஹ்ரிக்கே இன்சாப் கட்சி செயலாளர், தேர்தல் மோசடி தொடர்பில் குறிப்பிட்ட தேர்தல் அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதில் வெற்றி பெற்ற சுயேச்சை வேட்பாளர்களில் சுமார் 93 பேர் இம்ரான் கான் ஆதரவாளர்கள் என்று நம்பப்படுகிறது. இம்ரான் கான் கட்சிக்கு தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்ட நிலையிலேயே அவரது ஆதரவாளர்கள் சுயேச்சையாகப் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் சுயேச்சை வேட்பாளர்களுக்கு பாராளுமன்றத்தில் ஒதுக்கப்பட்ட 70 போனஸ் ஆசனங்கள் கிடைக்கப்பெறாதது அவர்கள் ஆட்சி அமைப்பதில் இருக்கும் பிரதிகூலமாக பார்க்கப்படுகிறது. இந்த போனஸ் ஆசனங்கள் கட்சிகளின் வாக்கு வீதத்திற்கு ஏற்ப பகிரப்படுகிறது. இதனால் நவாஸ் ஷரீப் கட்சி 20 போனஸ் ஆசனங்களை பெற வாய்ப்பு உள்ளது.

இந்நிலையில் 17 ஆசனங்களை வென்றுள்ள முத்தஹிதா குவாமி அமைப்புடன் உடன்பாடு ஒன்றை எட்டி இருப்பதாக நவாஸ் ஷரீப் கட்சி நேற்று அறிவித்தது. மறுபுறம் இம்ரான் கான் ஆதரவாளர்களும் ஆட்சி அமைப்பது பற்றி உறுதி அளித்துள்ளனர்.

இதற்கிடையே கருத்து வேறுபாடுகளைக் கைவிட்டு கட்சிகள் ஒன்றிணைந்து தேசிய ஒற்றுமை அரசை அமைக்க வெண்டும் என்று இராணுவ தலைமை தளபதி ஆசிம் முனீர் வலியுறுத்தியுள்ளார். எனினும் நவாஸ் ஷரீபுக்கு பலம்மிக்க இராணுவத்தின் ஆதரவு இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்நிலையில் ஆட்சி அமைப்பதில் இழுபறி சூழல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

## சர்வதேச செய்திகள்

# பலஸ்தீன அகதிகள் நிரம்பிய ரபாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் அதிகரிப்பு

## படை நடவடிக்கை திட்டத்திற்கு சர்வதேச அளவில் கடும் எச்சரிக்கை

பலஸ்தீன அகதிகளால் நிரம்பி வழியும் தெற்கு காசா நகரான ரபா மீது இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கும் நிலையில் அதற்கு சர்வதேச அளவில் கடும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

"இந்தப் பகுதியில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருப்பதாக" பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் கெமரூன் சுட்டிக்காட்டி இருப்பதோடு, இது பொதுமக்களிடையே பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடும் என்று நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் ஹங்கே ப்ருயின்ஸ் ஸ்லொட் எச்சரித்துள்ளார்.

ரபா மீது படையெடுத்தால் கடும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்றும் சவூதி அரேபியா மற்றும் ஓமான் எச்சரித்துள்ளன. இதனால் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்படக்கூடும் என்று காசாவில் ஆட்சியில் உள்ள ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது.



காசாவில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக சரமாரி தாக்குதல்களை நடத்தி வரும் இஸ்ரேல் அந்தப் பகுதியில் இன்னும் தனது படை நடவடிக்கையை முன்னேடுக்காத பிரதான நகராக இருக்கும் ரபா மீது தாக்குதலை நடத்துவதற்கு தயாராகி வருகிறது. இது தொடர்பில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடந்த வாரம் இராணுவத்திற்கு உத்தரவிட்டிருந்தார். இதனை அடுத்தே தாக்குதல் தொடர்பான அச்சம் அதிகரித்துள்ளது. இதனை மேலும் உறுதி செய்யும் வகையில் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா பகுதி மீதான இஸ்ரேலின் தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் ரபா நகரில் குடியிருப்புப் பகுதிகள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருக்கும் அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

ரபாவின் கிழக்கில் உள்ள அடைக்கலம் பெற்ற மக்கள் வசித்த வீடு ஒன்றின் மீது கடந்த சனிக்கிழமை (10) இரவு இஸ்ரேல் நடத்திய செல் தாக்குதலில் குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

ரபாவில் திட்டமிட்ட வகையில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் தனி நபர்கள் இலக்கு வைக்கப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது வரை இடம்பெற்ற வெவ்வேறு மூன்று தாக்குதல்களில் பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டிருப்பதோடு அதில் புலனாய்வுத் திணைக்கள பொலிஸ் தலைவரும் அடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ரபா நகரில் மக்கள் ஒழுங்கை குழப்பும் வகையிலேயே இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறுவதாக அங்குள்ள மக்கள் குறிப்பிட்டுள்ளனர். ரபா நகரில் மனிதாபிமான உதவிகளை வழங்குவது மற்றும் நகரின் சட்ட ஒழுங்கை பாதுகாப்பதில் பொலிஸ் திணைக்களம் தீவிரமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரபா மீதான படையெடுப்பு பேரழிவை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா ஏற்கனவே எச்சரித்திருப்பதோடு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை கவலையை வெளியிட்டுள்ளன.

எனினும் ரபாவில் இடம்பெயர்ந்த பொதுமக்களுக்கு 'பாதுகாப்பான வழி' ஏற்படுத்தப்படும் என்று நெதன்யாகு உறுதி அளித்துள்ளார். ஏ.பி. சி. நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், ரபா நகருக்கு இராணுவ நடவடிக்கையை விரிவுபடுத்தும் தனது திட்டத்தை மீண்டும் ஒருமுறை உறுதி செய்தார்.

"பொதுமக்கள் வெளியேறுவதற்கு பாதுகாப்பான வழியை ஏற்படுத்தி நாம் இதனைச் செய்வோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

காசா பகுதியின் எல்லையாக இருக்கும் ரபாவில் அந்தப் பகுதியின் 2.4 மில்லியன் மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர். இந்நிலையில் இஸ்ரேலிய துருப்புகள் அந்த நகர் மீது தாக்குதல் தொடுத்தால் மக்கள் அங்கிருந்து வெளியேற இடம் இல்லாத நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளனர்.

### 'புதைகுழி தான் மிச்சம்'

இந்நிலையில் எகிப்துடனான ரபா எல்லை வேலியில் இருந்து சில நூறு மீற்றர்கள் தூரத்தில் தனது கடைசி அடைக்கலமாக பல டஜன் கணக்கான பலஸ்தீன குடும்பங்கள் கூடாரங்களை அமைத்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்னவே இஸ்ரேலிய தாக்குதல்களால் பல முறை இடம்பெயர்ந்த நிலையிலேயே இங்கு வந்துள்ளனர்.

காசா மற்றும் எகிப்துக்கு இடையிலான 14 கிலோமீற்றர் நீண்ட எல்லையான பிலடொல்பி இடைவழி நிலப்பகுதியை ஒட்டியே சலேஹ் ரசைனா என்பவரும் கூடாரம் அமைத்துள்ளார். அவர் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலின் தாக்குதல்கள் ஆரம்பித்தது தொடக்கம் ஆறு முறை இடம்பெயர்ந்துள்ளார்.

பாதுகாப்பான இடம் ஒன்றை தேடிய பயணத்தில் அவரும் அவரது குடும்பத்தினரும் உடல் மற்றும் உள ரீதியில் பலவீனம் அடைந்துள்ளனர்.

"நான் ஜபலியாவில் இருந்து (வடக்கு காசா) வந்தேன். வடக்கு காசாவில் இருந்து தெற்கு வரை காசா நகர், டெயிர் அல் பலாஹ், கான் யூனிஸ் வரை இடம்பெயர்ந்து இப்போது ரபாவுக்கு வந்திருக்கிறேன். நாம் வந்த சில நாட்களிலேயே இங்கு தாக்குதல் நடத்தப்போவதாக இஸ்ரேல் எச்சரிக்க ஆரம்பித்திருக்கிறது" என்று 42 வயதாகும் நான்கு குழந்தைகளின் தந்தையான ரசைனா, மிடில் ஈஸ்ட் ஐ செய்தி இணையதளத்திற்கு தெரிவித்துள்ளார்.

ரபாவில் தற்போது 610,000 சிறுவர்கள் உட்பட 1.3 மில்லியன் மக்கள் சிக்கி இருப்பதாக சிறுவர்களை பாதுகாப்போம் அமைப்பு குறிப்பிடுகிறது. இந்த நிலப்பகுதி காசாவின் மொத்த நிலப் பரப்பில் ஐந்தில் ஒன்றுக்கும் குறைவான இடம் என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

"நான் இனியும் வேறு எங்கும் போகப்போவதில்லை. நான் ஏற்கனவே ஆறு தடவைகள் இடம் பெயர்ந்து விட்டே. எம்மால் அடைய முடியுமான கடைசி இடம் இது தான்" என்றார் ரசைனா.

"நாம் எகிப்துடனான எல்லைக்கு வந்தது இது பாதுகாப்பான இடம் என்று நம்பியாகும். இஸ்ரேலால் துரத்த முடியுமான கடைசி இடம் இது தான். இப்போது அவர்களால் மேலும் துரத்த முடியாது. எம்மாலும் இனி நகர முடியாது. இங்கிருந்து எம்மால் புதைகுழிக்குத் தான் செல்ல முடியும். இது எமது கடைசி இருப்பிடம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், ரபாவில் இராணுவ நடவடிக்கைக்கான வாய்ப்பு பற்றி கடும் கவலை அடைவதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் கமரூன் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார். "போரை உடன் நிறுத்தி உதவிகளை வழங்குவது மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது, தொடர்ந்து நீடித்த மற்றும் நிலையான போர் நிறுத்தம் ஒன்றை நோக்கிச் செல்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.




இதேநேரம், ரபாவின் நிலைமை பெரும் கவலை அளிப்பதாக நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் ஸ்லொட் குறிப்பிட்டுள்ளார். "காசாவின் பொதுமக்கள் பலரும் தெற்கிற்கு தப்பிச் சென்றிருக்கிறார்கள். அவ்வாறான மக்கள் நெரிசல் கொண்ட பகுதி ஒன்றில் பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கை ஒன்றினால் பெரும் உயிரிழப்புகள் மாத்திரமன்றி ஏற்படும் பாரிய மனிதாபிமான பேரழிவை எவ்வாறு பார்ப்பது என்பது கடினமாக உள்ளது. இது நியாயப்படுத்த முடியாதது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று சவூதி வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில், "இஸ்ரேலிய கொடிய தாக்குதலால் தப்பிச் சென்றிருக்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களின் கடைசி அடைக்கலமாக உள்ள காசாவின் ரபா நகரை இலக்கு வைப்பதற்கு எதிராக" எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உடனடி போர் நிறுத்தம் ஒன்றும் அந்த அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

மறுபுறம் தமது நிலப்பகுதியில் பலஸ்தீனர்களின் பாரிய இடம்பெயர்வொன்றுக்கு அனுமதி அளிக்கப்படாது என்று எகிப்து ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது. தமது நிலத்தில் இருந்து துரருத்தும் இஸ்ரேல் மீண்டும் தமது நிலத்திற்கு திரும்புவதற்கு அனுமதிக்காது என்று பலஸ்தீனர்கள் அஞ்சுகின்றனர்.

ரபா தவிர காசாவின் மற்ற பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்து வருகின்றன. தெற்கு காசாவின் மிகப்பெரிய நகரான கான் யூனிஸ் மற்றும் மத்திய காசாவில் நேற்றுக் காலை உக்கிர வான் தாக்குதல்கள் நீடித்ததாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

இஸ்ரேலிய தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 112 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 28,176 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 67,784 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை ஒருவாரத்திற்கு முன் உதவி கேட்டு தொலைபேசியில் அழைத்த 6 வயது சிறுமி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் அதே போன்று அவர்களை மீட்க அனுப்பப்பட்ட அம்புலன்ஸ் குழுவினர்களின் உடல்கள் காசா நகரில் கண்டுபிடிக்கப்பட்டதாக பலஸ்தீன மீட்புக் குழுவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 12ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.